### 1] Kirameki - 2 ( kee - RAH - meh - kee 2 )

- ✓ ஜப்பான் முதன்முறையாக ராணுவ பயன்பாட்டுக்காக Kirameki - 2 என்ற செயற்கைகோளை , H -2A ராக்கெட் மூலம் செலுத்தியுள்ளது.

### 2] TROPEX - 2017 [ Theatre Readiness Operational Exercise ]

- ✓ இந்திய கடற்படையின் வருடாந்திர தயார்நிலை பயிற்சி TROPEX - 2017 ஜனவரி 24ல் அரபிக்கடல் பகுதியில் துவங்கியுள்ளது . இந்த பயிற்சியில் INS விக்ரமாதித்யா , INS சென்னை., அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல் INS சக்ரா ஆகியவை ஈடுபட்டுள்ளன.

- ✓ இவைகளுடன் இணைந்து ராணுவம், விமானப்படை, கடலோர காவல்படை ஆகியோரும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

### 3] 10வது தேசிய பெண் குழந்தைகள் தினத்தில் ( ஜனவரி 24 / 2017 ) ராஜஸ்தான் மாநிலத்தில் மூன்று பெண் குழந்தைகள் ஒரு நாள் அமைச்சர்களாக பணியாற்றியுள்ளனர்.

- ✓ ராஜஸ்தான் மாநில பெண்கள் மற்றும் குழந்தைகள் நல இணை அமைச்சராக அனிதா பாதல் ( Anita Bhadel ) பணியாற்றி வருகின்றார். இவர் தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு தனது பொறுப்புகளை , 01) Jashoda Gameti ., 02) Sona Bairwa ., 03) Preeti Kanwar Rajaw ஆகிய மூவரிடமும் ஒரு நாள் மட்டும் வழங்கி இருந்தார்.

- ✓ அன்றைய தினம் இவர்கள் மூவரும் அங்கன்வாடி பணியாளர்களுக்கு 10,500 செல்போன் வழங்கவும் , மேற்பார்வையாளர்கள் 282 நபர்களுக்கு ipad வழங்கவும் உத்தரவிட்டுள்ளனர்.

### 4] The Sharp Sword UAV 2000

- ✓ கிலோ எடை கொண்ட வெடிபொருட்களை சுமந்து சென்று தாக்குதல் நடத்தும் திறன் கொண்ட , ஆளில்லா போர் விமானம் The Sharp Sword UAV ஐ சீனா அறிமுகம் செய்துள்ளது.

### 5] Hugo Chavez Prize for Peace and Sovereignty

- ✓ வெனிசுலா நாட்டின் முன்னாள் அதிபர் ஹியூகோ சாவோஸ் பெயரில் அமைந்த , முதலாவது ஹியூகோ சாவோஸ் அமைதி மற்றும் இறையாண்மை பரிசு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 6] தமிழக வரலாற்றில் முதல் முறையாக, குடியரசு தின விழாவில் முதல்வர் பன்னீர்செல்வம் கொடியேற்றி, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

- ✓ வழக்கமாக குடியரசு தின விழாவில், மாநில ஆளுநரே கொடியேற்றுவார் என்றாலும், தமிழகத்துக்கு பொறுப்பு ஆளுநராக இருக்கும் வித்யாசாகர் ராவ், மகாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராக இருக்கிறார். எனவே, அவர் அந்த மாநிலத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் கொடியேற்றினார்.

- ✓ இதே போன்று 2016ல் , அஸ்ஸாம் முதல்வர் தருண் கோகய் குடியரசு தினத்தில் தேசிய கொடியேற்றினார்.

### 7] வீரதீர செயல்களில் ஈடுபட்டு மனித உயிர்களை காப்பாற்றுவோரை கவுரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் குடியரசுத் தினத்தை முன்னிட்டு ஜீவன் ரக்சா பதக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

- ✓ அந்த வகையில் இந்த ஆண்டுக்காக மொத்தம் 36 பேருக்கு ஜீவன் ரக்சா பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இந்த பதக்கங்கள் வழங்க குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி ஒப்புதல் அளித்திருப்பதாக உள்துறை அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது.

- ✓ சர்வோத்தம் ஜீவக் ரக்சா பதக்கம், உத்தம் ஜீவக் ரக்சா பதக்கம், ஜீவன் ரக்சா பதக்கம் என மூன்று பிரிவுகளில் பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

- ✓ அதிகபட்சமாக உத்தர பிரதேசம் மற்றும் கேரளா மாநிலங்களில் இருந்து தலா 5 பேர் இந்த பதக்கத்துக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- ✓ மிசோரம், மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் இருந்து தலா 4 பேரும், கர்நாடகா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் இருந்து தலா இரண்டு பேரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

- ✓ தமிழகத்தில் இருந்து தேர்வு செய்யப்பட்டுள்ள பங்கஜ் குமார் பாண்டேவுக்கு ஜீவன் ரக்சா பதக்கம் வழங்கப்படுகிறது.

**8] இந்தியாவின் 68வது குடியரசு தின விழாவில் அபு தாபி இளவரசர் மொகம்மது பின் சயீத் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.**

- ✓ விழாவின் சிறப்பம்சமாக, ஐக்கிய அரபு அமீரக ஜனாதிபதியின் பாதுகாப்பு படையின் அணிவகுப்பு நடைபெற்றது.

- ✓ முப்படைடையச் சேர்ந்த 149 வீரர்கள் அடங்கிய இந்த குழு, இசைக்குழுவின் வாத்திய முழக்கங்களுடன் ராஜபாதையில் அணிவகுத்து இந்திய ஜனாதிபதிக்கு மரியாதை அளித்தனர்.

**9] இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக்சாண்டர் கடாகின் தில்லியில் காலமானார்.**

- ✓ அலெக்சாண்டர் கடாகின் 2009-ஆம் ஆண்டில் இருந்து ரஷ்ய தூதராக பணியாற்றி வருகிறார்.

**10] மத்தியப் பிரதேசத்தில் பாலித்தீன் பைகளுக்கு மே 1-ஆம் தேதி முதல் தடைவிதிக்கப்படும் என்று அம்மாநில முதல்வர் சிவராஜ் சிங் சௌஹான் அறிவித்தார்.**

**11] உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் குறித்து அமெரிக்கப் பத்திரிகை 'தி அமெரிக்கன் இன்டரஸ்ட்' வெளியிட்டுள்ள பட்டியலில் இந்தியா 6-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.**

- ✓ இந்தப் பட்டியலில், முதல் இடத்தை அமெரிக்காவும், இரண்டாவது இடத்தை சீனா மற்றும் ஜப்பான் நாடுகளும் பிடித்துள்ளன. ரஷியா 4-ஆவது இடத்தையும், ஜெர்மனி 5-ஆவது இடத்தையும் வகிக்கின்றன. 7 மற்றும் 8-ஆவது இடங்களில் முறையே ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகள் இடம் பெற்றுள்ளன.

**12] AKHADA**

- ✓ முன்னாள் மல்யுத்த வீரரும், பயிற்சியாளருமான மகாவீர் சிங் போகத்தின் வாழ்க்கை வரலாறு நூல். ( இவரின் வாழ்க்கையின் அடிப்படையில் அமைந்ததே, டங்கல் திரைப்படம் ஆகும் )

- ✓ எழுதியவர் -- சௌரப் துக்கால் ( Saurabh Duggal )

**13] இந்தியாவில் இரட்டை தலைநகரங்கள் கொண்ட மாநிலங்கள் மற்றும் இரண்டு மாநிலங்களுக்கு பொதுவான தலைநகராக இருக்கும் நகரங்கள் .**

- ✓ 01) ஜம்மு & காஷ்மீர் --- ஸ்ரீநகர் ., ஜம்மு
- ✓ 02) ஹிமாச்சல் பிரதேஷ் --- சிம்லா ., தர்மசாலா
- ✓ 03) மகாராஷ்டிரா -- மும்பை ., நாக்பூர்

- ✓ ( மொழிவாரி மாகாண பிரிப்பின் விதர்பா பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று நாக்பூர் இரண்டாவது தலைநகராக செயல்படும் என அறிவித்தார்கள் . ஆனால் அது பெயரளவில் மட்டுமே இருந்து வருகிறது. மும்பையில் மட்டுமே தலைநகரம் செயல்படுகிறது. ஆனால் இரண்டாவது தலைநகரம் என்ற உத்தரவு திரும்ப பெறப்படவில்லை )

- ✓ சண்டிகர் என்ற நகரம் மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள யூனியன் பிரதேசம் ஆகும். இந்த நகரம் ஹரியானா மற்றும் பஞ்சாப் ஆகிய இரண்டு மாநிலங்களின் தலைநகரமாக செயல்படுகிறது.

- ✓ 2014, மாநில பிரிவினைக்கு பின் ஆந்திரா மற்றும் தெலுங்கானா மாநிலங்களுக்கு பொதுவான தலைநகராக ஹைதராபாத் 2019 வரை செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ ஆனால் 2016 இறுதியில் இருந்தே ஆந்திரா மாநில தாற்காலிக தலைநகர் விசாகப்பட்டினத்தில் செயபட துவங்கியுள்ளது . புதிய தலைநகர் அமராவதி நிர்மான பணிகள் நடைபெற்று வருகின்றன.

- ✓ உத்தரகாண்ட் மாநிலத்தில் கடந்த ஆண்டு தலைநகருக்கு வெளியே சட்டசபை கூட்டம் மட்டுமே நடைபெற்றுள்ளது. அம்மாநிலத்தில் இரட்டை தலைநகரங்கள் இல்லை.

**14] துபாயில் உள்ள உலகின் மிக உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெற்ற புர்ஜ் கலிபா இந்திய குடியரசு தின விழாவை கௌரவிக்கும் வகையில் மூவர்ண நிறத்தில் ஒளிர்ந்தது.**

**15] 2008 பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டிகளில் உசைன் போல்ட்டுடன் 4X100மீ பந்தயத்தில் ஓடிய நெஸ்டா கார்ட்டர் ஊக்க மருந்து [ மெதில்ஹெக்சானியமின் ] எடுத்துக் கொண்டதாக நிரூபிக்கப்பட்டதால் உசைன் போல்ட் தங்கப்பதக்கத்தை இழந்தார்.**

- ✓ இதன் மூலம் உசைன் போல்ட்டின் 9 ஒலிம்பிக் தங்கப்பதக்கத்தில் தற்போது ஒன்று குறைந்துள்ளது.
- ✓ முதலில் பெய்ஜிங் ஒலிம்பிக் போட்டிகளில்தான் உசைன் போல்ட் 100, 200 மற்றும் 4X100 மீ ஓட்டங்களில் 3 தங்கங்களை வென்று சாதனை புரிந்தார். அதன் பிறகு 2012, 2016 ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்த 'டிரிபிள்' சாதித்து மொத்தம் 9 தங்கங்களுடன் ஒலிம்பிக்கிலிருந்து விடை பெறுவதாக அறிவித்தார் உசைன் போல்ட்.

**16] அமெரிக்காவின் தொலைத்தொடர்பு ஆணைய ராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அஜித் வரதராஜ் பாயை அதிபர் ட்ரம்ப் தேர்வு செய்துள்ளார்.**

- ✓ ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹாலே நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல மருத்துவத் துறை தலைவராக சீமா வர்மா, நியூயார்க் தெற்கு மாவட்ட அட்டர்னி ஜெனரலாக பிரீத் பஹாரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- ✓ அமெரிக்காவின் உளவு அமைப்பான சிஐஏ இயக்குநர் பதவிக்கு மைக் பம்பே, வெளியுறவுச் செயலாளராக ரெக்ஸ் டில்லர்சன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**17] பெங்களூரு பல்கலைகழகத்தின் கவுரவ டாக்டர் பட்டத்தை இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட் வாங்க மறுத்துள்ளார்.**

**18] மின்னணு பரிவர்த்தனையை ஊக்குவிக்க குறைவான வருமான பிரிவினருக்கும், சிறு வர்த்தகர்களுக்கும் ஸ்மார்ட்போன் வாங்க ரூ.1,000 மானியம் அளிக்க வேண்டும் என மாநில முதலைமைச்சர்கள் குழு மத்திய அரசுக்கு ஆலோசனை அளித்துள்ளது.**

**19] ரஞ்சி கோப்பை சாம்பியனான குஜராத் அணிக்கும், ரெஸ்ட் ஆப் இந்தியா அணிக்கும் இடையிலான இரானி கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் ரெஸ்ட் ஆப் இந்தியா அணி கோப்பையை வென்றுள்ளது.**

**20] ஜனவரி 25, தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, ஆந்திர மாநிலத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஸ்ரீகாகுளத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் இணைந்து அசோக சக்கர வடிவில் மனித சங்கிலி அமைத்தனர்.**

**21] பத்ம விருதுகள் – 2017**

- ✓ இந்த ஆண்டு 7 பேருக்கு பத்ம விபூஷண் விருது, 7 பேருக்கு பத்ம பூஷன் விருது மற்றும் 75 பேருக்கு பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், 19 பேர் பெண்கள். வெளிநாடு வாழ் இந்தியர்கள் உட்பட 7 பேர் வெளிநாட்டினர். 9 பேருக்கு இறப்புக்கு பின் இந்த உயரிய கவுரவம் அளிக்கப்படுகிறது.

- ✓ தமிழகத்தைச் சேர்ந்த 7 பேருக்கு இந்த ஆண்டுக்கான பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**பத்மவிபூஷண்:**
**===============**

01) கே.ஜே.யேசுதாஸ் - இசை - கேரளா
02) சத்குரு ஜக்கி வாசுதேவ் - ஆன்மிகம் [ தமிழகம் ]
03) சரத் பவார் - பொது வாழ்க்கை - மகாராஷ்டிரம்
04) முரளி மனோகர் ஜோஷி - பொது வாழ்க்கை - உத்தரப் பிரதேசம்
05) உடுப்பி ராமச்சந்திர ராவ் - அறிவியல் / பொறியியல் - கர்நாடகம்
06) சுந்தர் லால் பாட்வா (மறைவு)- பொது வாழ்க்கை - மத்தியப் பிரதேசம்
07) பி.ஏ.சங்மா (மறைவு) - பொது வாழ்க்கை - மேகாலயா

**பத்மபூஷன்:**
**============**

01) விஷ்வா மோகன் பட் - கலை / இசை - ராஜஸ்தான்
02) பேராசிரியர் தேவி பிரசாத் திவிவேதி - இலக்கியம் / கல்வி - உத்தரப் பிரதேசம்
03) தெஹாம்தன் உத்வாடியா - மருத்துவம் - மகாராஷ்டிரா
04) ரத்னா சுந்தர் மகராஜ் - ஆன்மிகம் - குஜராத்
05) நிரஞ்சனா நந்தா சரஸ்வதி - யோகா - பிஹார்
06) ஹெச்.ஆர்.ஹெச். பிரின்சஸ் மஹா சக்ரி ஸ்ரீநிதோன் (வெளிநாடு) - இலக்கியம் / கல்வி - தாய்லாந்து
07) 'சோ' ராமசாமி (மறைவு) - கல்வி / இலக்கியம் / இதழியல் - #தமிழகம்

## பத்மஸ்ரீ:
=======

01) வசந்தி பிஷ்த் - கலை / இசை - உத்ராகண்ட்

02) செம்மஞ்சேரி குஞ்சிராமன் நாயர் - கலை / நடனம் - கேரளா

03) அருணா மஹோந்தி - கலை / நடனம் - ஒடிசா

04) பாரதி விஷ்ணுவர்தன் - கலை / சினிமா - கர்நாடகா

05) சாது மெஹர் - கலை / சினிமா - ஒடிசா

06) டி.கே.மூர்த்தி - கலை / இசை - #தமிழகம்

07) லைஷ்ராம் வீரேந்திரகுமார் சிங் - கலை / இசை - மணிப்பூர்

08) கிருஷ்ண ராம் சவுத்ரி - கலை / இசை - உத்தரப் பிரதேசம்

09) போவா தேவி - கலை / ஓவியம் - பிஹார்

10) திலக் கீதாய் - கலை / ஓவியம் - ராஜஸ்தான்

11) அக்கே யாத்கிரி ராவ் - கலை / சிற்பம் - தெலங்கானா

12) ஜிதேந்திர ஹரிபால் - கலை / இசை - ஒடிசா

13) கைஷால் கேர் - கலை / இசை - மகாராஷ்டிரம்

14) பரஸல்லா பி பொன்னம்மாள் - கலை / இசை - கேரளா

15) சுக்ரி பொம்மகவுடா - கலை / இசை - கர்நாடகா

16) முகுந்த் நாயக் - கலை / இசை - ஜார்கண்ட்

17) புருஷோத்தமன் உபாத்யாயே - கலை / இசை - குஜராத்

18) அனுராதா பாத்வால் - கலை / இசை - மகாராஷ்டிரா

19) வாரெப்பா நபா நில் - பொது சேவை - தெலங்கானா

20) டி.கே.விஸ்வநாதன் - பொது சேவை - ஹரியானா

21) கன்வால் சிபல் - பொது சேவை - டெல்லி

22) பிர்கா பதாதுர் லிம்பூ முரிங்லா - இலக்கியம் / கல்வி - சிக்கிம்

23) ஏலி அகமது - இலக்கியம் / கல்வி - அஸ்ஸாம்

24) நரேந்திர கோலி - இலக்கியம் / கல்வி - டெல்லி

25) ஜி.வெங்கட சுப்பையா - இலக்கியம் / கல்வி - கர்நாடகா

26) அக்கிதம் அச்சுதன் நம்பூதரி - இலக்கியம் / கல்வி - கேரளா

27) காசிநாத் பண்டிதா - இலக்கியம் / கல்வி - ஜம்மு காஷ்மீர்

28) சாமு கிருஷ்ண சாஸ்திரி - இலக்கியம் / கல்வி - டெல்லி

29) ஹரிஹர் க்ரிபாலு திரிபாதி - இலக்கியம் / கல்வி - உத்தரப் பிரதேசம்
30) மைக்கேல் டனினோ - இலக்கியம் / கல்வி - தமிழகம்
31) பூனம் சூரி - இலக்கியம் / கல்வி - டெல்லி
32) வி.ஜி. படேல் - இலக்கியம் / கல்வி - குஜராத்
33) கோடேஸ்வரம்மா - இலக்கியம் / கல்வி - ஆந்திரா
34) பல்பீர் தத் - இலக்கியம் / கல்வி / இதழியல் - ஜார்கண்ட்
35) பாவனா சோமையா - இலக்கியம் / கல்வி / இதழியல் - மகாராஷ்டிரா
36) விஷ்ணு பாண்டியா - இலக்கியம் / கல்வி / இதழியல் - குஜராத்
37) சுப்ரதோ தாஸ் - மருத்துவம் - குஜராத்
38) பக்தி யாதவ் - மருத்துவம் - மத்தியப் பிரதேசம்
39) முகமது அப்துல் வஹீத் - மருத்துவம் - தெலங்கானா
40) மதன் மாதவ் கோத்போலே - மருத்துவம் - உத்தரப் பிரதேசம்
41) தேவேந்திர தயாபாய் படேல் - மருத்துவம் - குஜராத்
42) ஹரிகிருஷ்ணன் சிங் - மருத்துவம் - சண்டிகர்
43) முகுந்த் மின்ஸ் - மருத்துவம் - சண்டிகர்
44) அருண் குமார் சர்மா - தொல்லியல் - சண்டிகர்
45) சஞ்சீவ் கபூர் - சமையல் நிபுணர் - மகாராஷ்டிரா
46) மீனாட்சி அம்மா - களரி - கேரளா
47) ஜெனாபாய் தர்காபாய் படேல் - வேளாண்மை - குஜராத்
48) சந்திரகாந்த் பிதாவா - அறிவியல் / பொறியியல் - தெலங்கானா
49) அஜோய் குமார் ராய் - அறிவியல் / பொறியியல் - மேற்கு வங்கம்
50) சிந்தாகினி மெல்லேஷம் - அறிவியல் / பொறியியல் - ஆந்திரா
51) ஜிதேந்திர நாத் கோஸ்வாமி - அறிவியல் / பொறியியல் - அஸ்ஸாம்
52) தரிபள்ளி ராமையா - சமூக சேவை - தெலங்கானா
53) கிர்ஷி பரத்வாஜ் - சமூக சேவை - கர்நாடகா
54) காரிமுக் ஹக் - சமூக சேவை - மேற்கு வங்கம்
55) பிபின் கனத்ரா - சமூக சேவை - மேற்கு வங்கம்
56) நிவேதிதா ரகுநாத் பீடே - சமூக சேவை - #தமிழகம்
57) அப்பாசாஹேப் தர்மாதிகரி - சமூக சேவை - மகாராஷ்டிரா
58) பல்பீர் சிங் சீசேவால் - சமூக சேவை - பஞ்சாப்

59) விராட் கோலி - விளையாட்டு / கிரிக்கெட் - டெல்லி

60) சேகர் நாயக் - விளையாட்டு / கிரிக்கெட் - கர்நாடகா

61) விகாஸா கவுடா - விளையாட்டு / வட்டு எறிதல் - கர்நாடகா

62) தீபா மாலிக் - விளையாட்டு / தடகளம் - ஹரியானா

63) மாரியப்பன் தங்கவேலு - விளையாட்டு / தடகளம் - #தமிழகம்

64) தீபா கர்மாகர் - விளையாட்டு / ஜிம்னாஸ்டிக் - திரிபுரா

65) பிஆர் ஸ்ரீஜேஷ் - விளையாட்டு / ஹாக்கி - கேரளா

66) சாக்ஷி மாலிக் - விளையாட்டு - மல்யுத்தம் - ஹரியானா

67) மோகன் ரெட்டி வெங்கட்ராம போதனபு - வர்த்தகம் / தொழில் - தெலங்கானா

68) இம்ரான் கான் (என்ஆர்ஜ/பிஜஓ) - கலை / இசை - அமெரிக்கா

69) ஆனந்த் அகர்வால் (என்ஆர்ஜ/பிஜஓ) - இலக்கியம் / கல்வி - அமெரிக்கா

70) எச்.ஆர்.ஷா (என்ஆர்ஜ/பிஜஓ) - இலக்கியம் / கல்வி / இதழியல் - அமெரிக்கா

71) சுனிதி சாலமன் (மறைவு) - மருத்துவம் - #தமிழகம்

72) அசோக் குமார் பட்டாச்சார்யா (மறைவு) - தொல்லியல் - மேற்கு வங்கம்

73) டாக்டர் மாபுஸ்கர் (மறைவு) - சமூக சேவை - மகாராஷ்டிரா

74) அனுராதா கொய்ராலா (மறைவு) (வெளிநாட்டினர்) - சமூக சேவை - நேபாளம்

## 22] அலைபேசி செயலிகள் :-

- 1] புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட ரூபாய் நோட்டுகளை ஸ்கேன் செய்வதன் மூலம் பிரதமர் மோடியின் குரலை கேட்கும் வசதிக்கான மொபைல் செயலி = MODI KEY NOTE

  2] மத்திய சுகாதார துறை அமைச்சகத்தால் அறிமுகம் செய்யப்பட்ட செயலி = NO MORE TENSION App

- 3] மின் வசதிகளை பற்றிய தகவல்களை பெற மின்துறை அமைச்சர் ப்யூஸ் கோயல் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்ட செயலி = GARV-II

  4] குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்களை ஊக்குவிக்க மற்றும் கடைகளில் விற்கப்படும் அடைக்கப்பட்ட உணவுகளை தவிர்க்க விழிப்புணர்விற்காக அறிமுகம் செய்யப்பட்ட செயலி = Stanpan Suraksha

- 5] விவசாயிகளின் நலனுக்காக மத்திய விவசாயிகள் நலத்துறை அமைச்சகத்தால் அறிமுகம் செய்துள்ள செயலி = e-Nam

6] ஹஜ் யாத்திரை தொடர்பான நடவடிக்கைகளுக்காக சிறுபான்மையினர் மற்றும் விவகாரதுறை அமைச்சர் ஸ்ரீ முக்தார் அவ்களால் அறிமுகம் செய்யப்பட்ட செயலி = Haj Committee of India

- 7] ரூபாய் நோட்டுகள் செல்லாது என அறிவிக்கப்பட்ட நிலையில் மக்களின் கருத்தை அறிய மோடி துவக்கிய செயலி = NM App

8] பணமில்லா பரிவர்த்தனைக்களுக்காக மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு அதிக முறை தரவிறக்கம் செய்யப்பட்டு சாதனை படைத்த மொபைல் செயலி = BHIM App

- 9] பணமில்லா பரிவர்த்தனைக்காக Yes-Bank அறிமுகம் செய்த செயலி = SIMS e Pay

10] பணமில்லா பரிவர்த்தனைக்காக Indusland Bank அறிமுகம் செய்த செயலி = Indus Pay

- 11] Reliance நிறுவனம் மற்றும் Fun&Co நிறுவனம் இணைந்து உருவாக்கிய செயலி = CHILLX

12] ரயில் டிக்கட்களை வேகமாகவும் எளிதாகவும் பெற ஐஆர்சிடிசி அறிமுகம் செய்த செயலி = IRCTC RAIL CONNECT

- 13] பணமில்லா பரிவர்த்தனைக்காக ICICI வங்கி அறிமுகம் செய்த செயலி = Easy Pay

14] பணமில்லா பரிவர்த்தனைக்காக BSNL வங்கி அறிமுகம் செய்த செயலி = MOBI CASH

- 15] வெளிநாடு வாழ்இந்தியர்களுக்காக south Indian bank அறிமுகம் செய்துள்ள செயலி = SIB MIROR

16] பணமில்லா பரிவர்த்தனைக்காக ஆதார் நிறுவனத்தால் அறிமுகம் செய்துள்ள செயலி = Aadhar Payment app

- 17] மும்பை பங்குச்சந்தை Mutual Fund வர்த்தகத்திற்காக அறிமுகம் செய்துள்ள செயலி = BSE STAR MF

18] வர்த்தகம் மற்றும் தொழில் துறையால் சிறப்பு பொருளாதார மண்டலங்களை பற்ற தகவல்களை பெற அறிமுகம் செய்யப்பட்ட செயலி = SEZ INDIA

- 19] நுகர்வோர்களை குறைகளை தீர்க்க மத்திய அரசால் அறிமுகம் செய்யப்பட்ட செயலி = Smart Consumer & Online Consumer Mediation Center

20] சல்மான் கானின் 51வது பிறந்த தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள மொபைல் செயலி = Being Touch

- 21] சாலை விபத்தில் ஏற்படும் கலை மான்களின் இறப்பை தவிர்க்க பின்லாந்து நாட்டினரால் அறிமுகம் செய்யப்பட்ட செயலி = Reindeer bell

22] பணம் இருக்கும் ஏடிஎம் களை பற்றி அறிய உதவும் செயலி = வால்நெட்

- 23] இந்தியாவின் சார்பில் ஆதாரத்துடன் முன் வைக்கப்பட்டு கூகுள் நிறுவனத்தால் தடைசெய்யப்பட்ட செயலி = SMESH UP

24] சமீபத்தில் ஹிந்தி மொழியில் தனது சேவையை தொடர்ந்த தகவல் பரிமாற்ற செயலி = Allo

- 25] கூகுள் நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட புகைப்படங்களை ஸ்கேன் செய்யும் செயலி = Photo Scan

26] சிறு மற்றும் குறு தொழில் ஈடுபடுவோர்களுக்காக கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்துள்ள செயலி = Google My Business

- 27] ஆபத்து காலங்களில் நமது இருப்பிடத்தை நம்பகத்தனமான நபர்களுக்கு தெரிவிக்க கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்த செயலி = Trusted Contacts

28] தொழில் நிறுவனங்களுக்கு மின்னணு தொழில் நுட்பத்தை பயிற்று விக்கும் வகையில் தமிழ் ஆங்கிலம் தெலுங்கு மராத்தி ஆகிய மொழிகளில் கூகுள் அறிமுகம் செய்துள்ள செயலி = Premier

- 29] அருகில் உள்ள கழிவறை வசதிகளை அறிய டெல்லி மாநிலம் அறிமுகம் செய்த செயலி = Google Toilet Locator

### 23] ஜனவரி 25 - ஏழாவது தேசிய வாக்களர் தினம்

- ✓ கருப்பொருள் --- இளைஞர்கள் மற்றும் எதிர்கால வாக்காளர்களுக்கு அதிகாரமளித்தல் [ “ Empowering Young & Future Voters” ]

- ✓ இந்திய தேர்தல்கள் தொடர்பான "வாழும் ஜனநாயகம்' [ Unfolding Indian Elections- Journey of living democracy ] என்ற தலைப்பில் மத்திய தகவல் ஒலிபரப்புத்

துறையுடன் இணைந்து தேர்தல் ஆணையம் தயாரித்த புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது.

- ✓ தேர்தலில் சிறப்பாக செயல்பட்ட மாநிலத்திற்கான விருதை தமிழக தேர்தல் அதிகாரி ராஜேஷ் லக்கானி பெற்றுள்ளார்.
- ✓ இளம் வாக்காளர்களை அதிக அளவில் சேர்க்க நடவடிக்கை எடுத்ததற்காக திருச்சி மாவட்ட தேர்தல் அலுவலர் பழனிச்சாமிக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ புதுச்சேரியில்சிறப்பாக தேர்தல் பணியாற்றியதாக தலைமை தேர்தல் அதிகாரி கந்தவேலு, சீனியர் எஸ்.பி., கவாஸ், தேசிய தகவல் மைய தொழில் நுட்ப இயக்குனர் சுவாமிநாதன் ஆகியோர், இந்த ஆண்டு தேசிய விருது பெற்றுள்ளனர்.
- ✓ 2016 சட்டப்பேரவைத் தேர்தலின்போது, வாக்காளர் விழிப்புணர்வு பிரசாரத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக, இந்திய தேர்தல் ஆணையத்தின் விருது மதுரை மாவட்ட ஆட்சியருக்கு ( கொ. வீரராகவ ராவ் ) வழங்கப்பட்டுள்ளது.
- ✓ தமிழகத்தில், வருமான வரித்துறை புலனாய்வு பிரிவு, கூடுதல் டைரக்டர் ஜெனரலாக இருந்த பாலகிருஷ்ணன்., கூடுதல் டைரக்டர் ஜெனரலாக பணிபுரிந்து வரும், ராய் ஜோஸ்& பாலகிருஷ்ணன் ஆகிய மூவருக்கும் தேசிய அளவிலான சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.
- ✓ 2016-ஆம் ஆண்டு நடந்த சட்டமன்ற தேர்தலின் போது வாக்காளர் மத்தியில் தந்தி தொலைக்காட்சி விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக தந்தி தொலைக்காட்சிக்கு நேஷனல் மீடியா அவார்டு என்று அழைக்கப்படும் சிறந்த தொலைக்காட்சிக்கான தேசிய விருதை அகில இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

### 24] Saksham – 2017 (Sanrakshan Kshamta Mahotsav)

- ✓ பெட்ரோலியப் பொருட்களை சிக்கனமாகவும் , சிறப்பான வகையிலும் பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் Saksham – 2017 (Sanrakshan Kshamta Mahotsav) பெட்ரோலிய துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

### 25] The Coalition for Epidemic Preparedness Innovations (CEPI)

- ✓ உலக பொருளாதார அமைப்பின் சார்பில் 500 மில்லியன் டாலர் மதிப்பில் தொற்றும் நோய்களை எதிர்கொள்வதற்கான கண்டுபிடிப்பு கூட்டணி [ The Coalition for Epidemic Preparedness Innovations (CEPI) ] ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ✓ முதற்கட்டமாக 1) Mers - Coronavirus ., 2) Lassa Fever ., 3) Nipah virus ஆகியவற்கான தடுப்பு மருந்தை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் கண்டுபிடிக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ✓ இதில் 100 மில்லியன் டாலரை மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையும் , ஜெர்மனி , ஜப்பான் , நார்வே ஆகிய நாடுகள் இணைந்து 260 மில்லியன் டாலரை வழங்கவுள்ளன. இதற்கு இந்தியாவும் நிதியுதவி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது.

**26] 'நாடு முழுவதும் கிராமப்புற வீட்டு வசதியை ஊக்குவிக்கும் புதிய திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கிராப்புறங்களில் புதிதாக வீடு கட்டுதல் அல்லது பழைய வீட்டை சீரமைத்தல் ஆகிய பணிகளுக்காக ரூ.2 லட்சம் வரை பெறப்படும் வீட்டுக்கடன் வட்டியில் மானியம் வழங்கப்படும். அதேநேரம் பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் (பிஎம்ஏஒய்-ஜி) கீழ் ஏற்கெனவே பயனடைந்தவர்களுக்கு இது பொருந்தாது.**

- ✓ இந்தத் திட்டம் ரிசர்வ் வங்கியின் துணை அமைப்பான தேசிய வீட்டு வசதி வங்கியின் (என்எச்பி) மூலம் செயல்படுத்தப்படும். வீட்டுக் கடன் பெறும் வாடிக்கையாளர் சார்பில் 3 சதவீத வட்டியை மத்திய அரசு என்எச்பி-க்கு செலுத்திவிடும்.
- ✓ பின்னர் வாடிக்கையாளர் கடன் பெற்றுள்ள வங்கிக்கு என்எச்பி இந்தத் தொகையை அனுப்பி வைக்கும். இதனால், வாடிக்கையாளர்களின் மாதாந்திர தவணை கணிசமாகக் குறையும்'

**27] இமயமலையில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை மறுஅளவீடு செய்ய இந்திய நில அளவீட்டுத் துறையான "ஜியலாஜிக்கல் சர்வே ஆஃப் இந்தியா' முடிவு செய்துள்ளது.**

**28] 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கக்கூடிய புதிய ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**

- ✓ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம், "வரிஷ்ட பென்ஷன் பீமா யோஜனா' என்ற பெயரில் இந்தக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

- ✓ இந்தத் திட்டப்படி, முதலீட்டுத் தொகையில் ஆண்டுதோறும் 8 சதவீதத் தொகை 10 ஆண்டுகளுக்குத் திருப்பியளிக்கப்படும்.

- ✓ இந்தத் தொகையை மாதா மாதமோ, மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ, அரையாண்டு அல்லது ஆண்டுக்கு ஒரு முறையோ காப்பீட்டுதாரர் திரும்பப் பெற்றுக்கொள்ளும் வசதி உள்ளது.

**29] சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஆஸ்கர் விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட திரைப்படங்கள் மற்றும் திரைத்துறையினருக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளன.**

- ✓ இதில், 14 பிரிவுகளின் கீழ் ஹாலிவுட் படமான "லா லா லேண்ட்' என்ற திரைப்படம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அதேபோல், "லயன்' என்ற ஹாலிவுட் திரைப்படத்தில் நடித்த இந்திய நடிகரான தேவ் படேல் சிறந்த துணை நடிகருக்கான பரிந்துரைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

**30] நேபாளம், வங்கதேசம், பூடான், மியான்மர் உள்ளிட்ட அண்டை நாடுகளுடன் ரயில் போக்குவரத்து தொடர்பை உருவாக்குவது குறித்து மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது.**

**31] ராஜஸ்தான் மாநிலத்தில் பொருளாதாரம் படித்துவரும் 12-ம் வகுப்பு பள்ளி மாணவர்களின் பாடத்திட்டத்தில் " பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் ரொக்கமில்லா பொருளாதாரம் " ஆகியவற்றை அடுத்த கல்வியாண்டு முதல் சேர்க்க திட்டமிட்டுள்ளதாக அம்மாநில கல்வி வாரியம் தெரிவித்துள்ளது.**

- ✓ ஜெய்ப்பூர் மெட்ரோ ரெயில் நிலையம் முழுவதுமாக, பணமில்லாமல் டிஜிட்டல் பரிவர்த்தனை மூலம் பயணிகள் டிக்கெட்டை பெறும் வசதியை அரசு ஏற்படுத்தியுள்ளது.

**32] Golden Girls Of India – Pride Of Nation**

- ✓ ரியோ ஒலிம்பிக்கில் சிறப்பான பங்களிப்பை வழங்கிய இந்திய வீராங்கனைகள் P.V. சிந்து., சாக்ஷி மாலிக் , தீபா கர்மாகர் ஆகியோரை கவுரவிக்கும் பொருட்டு இந்திய அஞ்சல்துறை Golden Girls Of India – Pride Of Nation என்ற பெயரில் அஞ்சல் உறை வெளியிட்டுள்ளது.

**33] United Nations World Tourism Organisation (UNWTO) Awards for Excellence and Innovation in Tourism**

- ✓ மகாராஸ்டிரா மாநிலம், தானே மாவட்டத்தில் இஸ்கான் ( ISKON ) அமைப்பினரால் பராமரிக்கப்பட்டுவரும் கோவர்தன் கிராமத்திற்கு, ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பினரால் வழங்கப்படும் விருது வழங்கப்பட்டுள்ளது.

**34] ஜனவரி 30ல் மணிலாவில் நடைபெறவுள்ள மிஸ் யுனிவர்ஸ் போட்டியின் நடுவராக பணியாற்ற 1994ம் ஆண்டு மிஸ் யுனிவர்ஸ் பட்டம் வென்ற சுஸ்மிதாசென் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

**35] பிரிட்டனில் பயன்பாட்டில் இருக்கும் 1.3 பில்லியன் பவுண்ட்களில் 43.3 கோடி அளவுக்கு '1 பவுண்ட்' நாணயங்கள் உள்ளன. தற்போது இந்த நாணயங்களுக்கு பதிலாக புதிய 1 பவுண்ட் நாணயங்களை வெளியிடவுள்ளது பிரட்டன் அரசு. இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதி வரை பழைய நாணயங்களை மாற்றிக்கொள்ள கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.**

**36] Ngari No 1 Telescope**

- ✓ திபெத்தில், சீனாவின் புதிய ஈர்ப்புவிசை தொலைநோக்கி 'நகரி 1', இந்திய எல்லைக்கு 30 கிலோ மீட்டர் தொலைவில், கடல்மட்டத்தில் இருந்து 5250 மீட்டர் உயரத்தில் திபெத்திய தலைமையகம் உள்ள நகரி மாகாணத்தில் ( Shiquanhe நகர் ) அமைக்கப்பட்டுள்ளது.

- ✓ இதன் மூலம் அண்டம் உருவானதை விளக்கும் பெருவெடிப்புக் கொள்கை ஆய்வு செய்யப்பட உள்ளது. இந்த தொலைநோக்கி 18 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்டது.

**37] புகை பிடிப்பதால் 2030-க்குள் தற்போது இறப்பவர்களைவிட 33%-க்கும் அதிகமானவர்கள் உயிரிழக்க வாய்ப்புள்ளதாக உலக சுகாதார அமைப்பின் அறிக்கை கூறியுள்ளது.**

- ✓ உலகளவில், ஆண்டுக்கு 60 லட்சம் பேர் சிகரெட் பிடிப்பதால் இறக்கின்றனர். 2030-க்குள், ஆண்டுக்கு 80 லட்சம் பேர் இறக்க வாய்ப்புள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

**38] Selfie to Self - Expression**

- ✓ லண்டனில் உள்ள சாட்சி கேலரியில் (Saatchi gallery) செல்ஃபிகளுக்கென்றே ஒரு கண்காட்சி மார்ச் 31 முதல் மே 30வரை நடத்தப்பட உள்ளது.

- ✓ செல்ஃபிகளுக்கு உள்ள முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் இந்த கண்காட்சி அமையும் என்று கூறப்படுகிறது.

### 39] Bengaluru most dynamic city in world

- ✓ உலக அளவில் மிகவேகமான வளர்ச்சியை அடையும் நகரம் என்ற பெருமையை பெங்களூரு பெற்றுள்ளது. சுவிட்சர்லாந்தின் டாவோஸில் நடைபெற்ற உலக பொருளாதார அமைப்பின் ஆண்டு மாநாட்டில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

- ✓ மேலும், தொழில்நுட்பம், கண்டுபிடிப்பு போன்றவற்றிலும் பெங்களூருவுக்கு முதலிடம் பெற்றுள்ளது. 02) ஹோசிமின் நகரம் ., 03) சிலிகான் பள்ளத்தாக்கு ., 04) ஷாங்காய் ., 05) ஹைதராபாத்

### 40] 2016-ம் ஆண்டுதான் பதிவு செய்யப்பட்டதிலேயே மிக வெப்பமான ஆண்டு என்று நாசா மற்றும் NOAA அமைப்புகள் கூறியுள்ளன.

- ✓ 2016-ம் ஆண்டு நிலப்பரப்பு மற்றும் கடற்பரப்பில் நிலவிய சராசரி வெப்பநிலை அளவு 58.69 டிகிரி ஃபார்ன்ஹீட் ஆகும். இது 20-ம் நூற்றாண்டில் நிலவிய சராசரி வெப்ப அளவை விட 1.69 டிகிரி அதிகம்.

**41] டாடா சன்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான டாடா எலக்ஸி ( Tata Elxsi ) சார்பில் உருவாக்கப்படும் டிரைவர் இல்லா காரை பெங்களூரு சாலைகளில் சோதனை ஓட்டம் செய்யப்போவதாக அறிவித்துள்ளது.**

### 42] சர்வதேச தொழிலாளர் அமைப்பு ( ILO) , World Employment and Social Outlook எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் , இந்தியாவில் வேலைவாய்ப்பு 2017ல் ஒரு லட்சம் எண்ணிக்கை அளவில் குறையும் என்றும் , 2018ல் 2லட்சம் குறையும் என்றும் தெரிவித்துள்ளது.

**43] 1200 கிலோமீட்டர் விட்ட அளவு கொண்ட பூமியின் உள்வட்டப் பகுதியில் இரும்பு ( 85%) , நிக்கலுக்கு (10%) அடுத்து 5% அளவுக்கு சிலிக்கான் உள்ளதாக ஜப்பானை சேர்ந்த தொஹோகு பல்கலைக்கழக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.**

### 44] Aaple Sarkar Mum WiFi App

- ✓ கடந்த வாரம் மகாராஷ்டிரா மாநில அரசின் சார்பில் Mumbai WiFi என்ற திட்டத்தின் கீழ் 500 இடங்களில் இலவச hotspot வசதி உருவாக்கப்பட்டது.

- ✓ இந்த hotspot இடங்களை அறிந்து கொள்ள Aaple Sarkar Mum WiFi app இந்த வாரம் அறிமுகம் செய்யப்படும் என அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

**45] இந்திய கடலோரக் காவல் படையின் கிழக்குப் பிராந்தியம் சார்பில் "கடலில் ஒரு நாள்' என்ற நிகழ்ச்சி சென்னை அருகே நடுக்கடலில் ஜனவரி 22ல் நடைபெற்றது.**

- ✓ இந்திய கடற்படையிலிருந்து கடலோரக் காவல்படை 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 1 ஆம் தேதி தனியாக பிரிக்கப்பட்டது. இதனை நினைவுகூரும் வகையில் பிப்.1-ஆம் தேதி கடலோரக் காவல்படை தினமாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில் 41-வது கடலோரக் காவல்படை தினம் வரும் பிப்.1 அன்று கொண்டாடப்பட உள்ளது.

- ✓ இதன் ஒரு பகுதியாக கடலோரக் காவல்படையின் அன்றாட செயல்பாடுகள் குறித்து பொதுமக்கள், படையினரின் குடும்பத்தினர், பத்திரிகையாளர்கள் அறிந்து கொள்வதற்காக "கடலில் ஒரு நாள்' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது.

**46] சட்டசபை தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் தேர்தல் தொடர்பான புகார்களை அளிக்க "சமாதான்' என்னும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.**

**47] 1 முதல் 8-ம் வகுப்பு வரையிலான மாணவர்களிடம் எதிர்நோக் கும் கற்றல் திறன்களை மதிப்பிடு வதற்கான அளவுகோல்களை வரைமுறைப்படுத்தும், 'கற்றல் திறன் மதிப்பிடல் திட்டம்' அடுத்த கல்வியாண்டு முதல் அமலுக்கு வரும் என, மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் தெரிவித்துள்ளார்.**

**48] ஒடிசா மாநிலம் பாலாசோரில் உள்ள, சண்டிபூர் ராக்கெட் ஏவுதளத்திலிருந்து, அதிநவீன, 'பினாகா ராக்கெட் மார்க் 2' நேற்று (24-01-17) சோதனை முறையில் ஏவப்பட்டது. ராணுவ பயன்பாட்டில், எதிரியின் இலக்கை துல்லியமாக கணிப்பது, இலக்கை மாற்றுவது உள்ளிட்ட முக்கிய செயல்பாடுகளில் இவ்வகை ராக்கெட்டுகள் பயன்படுத்தப்படுகிறது.**

**49] மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் மூலம் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நடமாடும் பால்குளிரகம் தமிழ்நாட்டிலேயே ஈரோடு மாவட்டத்தில் முதன் முதலாக தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.**

**50] 850 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட உலகின் மிகப்பெரிய சூரிய மின் ஆலையை கிங்காய் (Qinghai province) மாகாணத்தில் சீனா அமைத்துள்ளது.**

**51] இந்தியாவிலேயே முதல் முறையாக பொதுமக்களின் உடல்நலம் குறித்த விவரங்களை கம்ப்யூட்டர் மயமாக்கும் 'இ ஹெல்த்' திட்டம் கேரளாவில் அறிமுகப்படுத்தப்படுகிறது.**

- ✓ இதன்படி சுகாதாரத் துறை ஊழியர்கள் வீடு வீடாக சென்று அனைவரின் உடல் நலம் குறித்த விவரங்களை சேகரிப்பார்கள். இதற்காக ஊழியர்கள் அனைவருக்கும் கணிப்பலகை (டேப்லட்) வழங்கப்படும். பொதுமக்களின் அனைத்து உடல்நலம் குறித்த விவரங்களையும் ஊழியர்கள் கணிப்பலகை மூலம் சேகரிப்பார்கள்.

- ✓ இந்த விவரங்கள் உடனுக்குடன் மாநில கம்ப்யூட்டர் ஆவண காப்பகத்தில் பதிவாகும். இது தவிர அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கு செல்லும் நோயாளிகளின் விவரங்களும் உடனுக்குடன் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்படும். முதல்கட்டமாக 7 மாவட்டங்களில் இந்த திட்டம் அமல்படுத்தப்படும்.

- ✓ 2 வருடங்களில் முதல்கட்ட நடவடிக்கை முடிவடையும். இதன் பிறகு அடுத்த கட்டமாக மீதமுள்ள 7 மாவட்டங்களில் விவர சேகரிப்பு பணிகள் தொடங்கும். இவ்வாறு சேகரிக்கும் அனைத்து விவரங்களும் ஆதாருடன் இணைக்கப்படும்.

**52] அண்டார்டிகா கண்டத்தை யாருடைய உதவியும் இல்லாமல் தனியே சுற்றி வந்து ஆஸ்திரேலிய நாட்டைச் சேர்ந்த பெண் லிசா பிலேயர் உலக சாதனை படைத்துள்ளார்.**

- ✓ இவர் 1,600 கடல் மைல் தூரத்தை 100 நாட்களில் பயணம் செய்து அண்டார்டிகா கண்டத்தை எட்டியுள்ளார். இதற்கு முன்னதாக 102 நாட்களில் ஒருவர் பயணம் செய்த்தது சாதனையாக இருந்து வந்தது.

**53] குழுக்கள் (Oct, nov dec and jan 2017)**

# ஸ்ரீ ஜெகன் குழு- தெரு நாய்கள் கடித்து மனித உயிர்கள் பலியாவது பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு.

# M L Sharma குழு- CBI முன்னாள் இயக்குநர் இரஞ்சித் சின்ஹாவுக்கு எதிரான புகார்களை விசாரிக்க அமைக்கப்பட்ட குழு

# MATA PRASAD குழு- மின்கடத்துதல்களை சீரமைத்து பொருளாதார கொள்கை அடிப்படையில் மின்சாரம் வழங்குவது தொடர்பான பரிந்துரையை அரசுக்கு வழங்கிய குழு

# K S வால்டியா குழு- சரஸ்வதி நதியை பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு

# L நரசிம்ம ரெட்டி குழு- இராணுவ வீரர்களுக்கான "One rank One Pension" தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட குழு

# முனியலப்பா குழு- இந்தியாவில் பறவை காய்ச்சல் நிலை பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு

# ஜீஎஸ் ஜா குழு- காவிரி நதிநீர் பாசனப் பகுதியில் நீர்நிலை குறித்து ஆராய மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழு

# K N BASHA குழு- தமிழகத்தில் ஆம்னி பஸ்(Omni bus) கட்டணங்கள் பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு

# கைலாஷ் காம்பிர் குழு- இரவில் தங்கும் இடம் இல்லாமல் அவதிப்படுபவர்கள்(Night Shelters) நிலை குறித்து ஆராய உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட குழு

# அமிதாப் கன்ட் குழு- அனைத்து அரசு குடிமகன்களின்(govt citizens) பணபரிவர்த்தனையை டிஜிட்டல் மயமாக்க அமைக்கப்பட்ட குழு

# Ratan P Watal குழு- டிஜிட்டல் பணபரிவர்த்தனையை ஊக்குவிப்பது பற்றி ஆராய நிதி அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட குழு

# சந்திரபாபு நாயுடு குழு- டிஜிட்டல் பணபரிவர்த்தனையை ஊக்குவிப்பது மற்றும் அதனை பற்றி ஆராய NITI Aayogல் அமைக்கப்பட்ட குழு

# அஜித் மோகன் குழு- இணைய திருட்டு பற்றி ஆராய IAMAIல் அமைக்கப்பட்ட குழு
IAMAI- Internet and Mobile Association Of India

# A K Bajaj குழு- கிருஷ்ணா நதிநீர் மேலாண்மை வாரியம் அமைப்பது பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு

# பிரவின் வசிஸ்தா குழு- வர்தா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆராய "பிரவின் வசிஸ்தா" ( Praveen Vashishtha) தலைமையில் மத்திய அரசு தமிழகத்திற்கு குழு ஒன்றை அனுப்பியுள்ளது

# B N Srikrishna குழு-நிறுவனமயப்படுத்துதல் தொடர்பான தீர்ப்புகளை வழங்கும் நடுவர் மைய இயங்கமைப்பை சீரமைக்க அமைக்கப்பட்ட குழு

# அஜய் தியாகி குழு- நிதி தகவல் மேலாண்மை மையத்தை(Financial Data Management Centre) அமைப்பது பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு

# ஈஸ்வர் குழு- வருமான வரி சட்டங்களை எளிமையாக்க அமைக்கப்பட்ட குழு

# Injeti srinivas குழு- மத்திய விளையாட்டு துறையை மேம்படுத்தவும் விளையாட்டு துறையின் ஆளுமையை நெறிப்படுத்தவும் அமைக்கப்பட்ட குழு

# Sumit Bose குழு- சமூக பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பை(Socio economic and caste census) மத்திய அரசுக்கு சமர்பித்த குழு

# Timothy Gonsalves குழு- IIT களில் 20% பெண்களுக்கு வழங்குவதை பரிந்துரைத்த குழு

# N K Singh குழு- நிதிசார் பொறுப்பு மற்றும் நிதிநிலை அறிக்கை மேலாண்மை (Fiscal Respobsiblity and Budget Management-FRBM) பற்றி ஆராய அமைக்கப்பட்ட குழு

# திவாலாகி கடனை திருப்பி தர முடியாத நிறுவனங்களை சீரமைக்க Insolvency and Bankruptcy Board Of India 2 குழுக்களை அமைத்துள்ளது.

1. கடன் அளிக்கும் சேவையாளர்களுக்கொ ஆலோசனை வழங்க "Mohandas Pai" தலைமையில் ஒரு குழுவும்

2. பெறுநிறுவனங்களின் திவால் பிரச்சினையை முடிவுகட்ட "Uday Kotak" தலைமையில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டது

### 54] Climate Change

- ✓ எழுதியவர் -- பிரிட்டன் இளவரசர் சார்லஸ் ( வேல்ஸ் இளவரசரும் இவரே )

- ✓ இணைந்து எழுதியவர்கள் -- டோனி ஜுனிபர் & எமிலி சூக்பர்க்

**55] 28th Dantan Gramin Mela , குடியரசுத்தலைவரால் மேற்கு வங்கத்தில் ஜனவரி 19ல் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.**

**56] ம.பி. மாநில முதல்வரால் ஆனந்தம் திட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி வறியோர்க்கு , வசதி படைத்தோரிடம் பெற்று உதவுவது ஆகும். இதற்காக ஆனந்த் என்ற துறை புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது.**

**57] Jackself என்ற தன்னுடைய படைப்புகளுக்காக பிரிட்டனின் Jacob Polley, 2016 T S Eloit பரிசு வென்றுள்ளார்**

**58] 2017 டெல்லி ஓபன் சர்வதேச செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில் தஜிகிஸ்தான் நாட்டைச்சேர்ந்த Farrukh Amonatov வென்றுள்ளார்.**

**59] Pro Wrestling League 2017 தொடரின் இறுதிப்போட்டியில் பஞ்சாப் ராயல்ஸ் அணி , ஹரியானா ஹேம்மர்ஸ் அணியை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.**

**60] International Symposium on Medicinal and Aromatic plants of India மாநாடு டெல்லியில் நடைபெற்று முடிந்துள்ளது.**

**61] Cashless Island – Karang**

- ✓ இந்தியாவில் ரொக்க பரிவர்த்தனை இல்லாத முதல் தீவு என்ற பெருமையை மணிப்பூர் மாநிலம் லோக்டக் ஏரியில் அமைந்துள்ள " கரங் ( Karang ) " தீவு பெற்றுள்ளது.

**62] மத்திய வெளியுறவுத் துறைச் செயலர் எஸ். ஜெய்சங்கரின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.**

- ✓ [ வெளியுறவுத் துறைச் செயலர் எஸ்.ஜெய்சங்கரின் பதவிக்காலம் வரும் 28-ஆம் தேதியுடன் நிறைவடையவுள்ளது.]

**63] மத்திய பொருளாதாரத் துறைச் செயலர் சக்திகாந்த தாஸின் பதவிக்காலம் 3 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.**

- ✓ [ இவரது பதவிக்காலம் வரும் மார்ச் 31ம் தேதி நிறைவடைகிறது. தற்போது மே 31வரை நீட்டிக்கப்பட்டுள்ளது ]

**64] நிலக்கரிச் சுரங்க முறைகேட்டில் தொடர்புடையவர்களைச் சந்தித்துப் பேசியதாக சிபிஐ முன்னாள் இயக்குநர் ரஞ்சித் சின்ஹாவுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது.**

- ✓ சிறப்பு புலனாய்வுக் குழுவுக்கு தற்போதைய சிபிஐ இயக்குநர்அலோக் குமார் வர்மா தலைமை வகிப்பார்.

**65] அமெரிக்காவின் முந்தைய அதிபர் ஒபாமா அறிமுகம் செய்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ரத்து செய்து, மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வரும் உத்தரவில் புதிய அதிபர் டொனால்ட் டிரம்ப் கையெழுத்திட்டார்.**

- ✓ அதிபராகப் பதவியேற்றதும் டிரம்ப் கையெழுத்திட்ட முதல் உத்தரவு இதுவாகும்.

**66] Jinnah Often Came to Our House**

- ✓ எழுதியவர் கிரண் தோஷி ( The Hindu 2016 விருது பெற்றுள்ளது )

**67] The Karachi Deception →** எழுதியவர். --- சத்ருஜித் நாத்

68] **இந்தியாவின் முதல் சூரிய சக்தி படகு , " ஆதித்யா " வேம்பநாடு ஏரியில் ( கேரளா ) இயக்கப்பட்டுள்ளது.**

**69] இந்தியாவின் முதல் பெண்கள் இலக்கிய திருவிழா ( Gender Literature Festival ) ஏப்ரல் மாதம் பாட்னாவில் நடைபெற உள்ளது.**

**70] ஏர்டெல் பேமண்ட் வங்கி தனது வாடிக்கையாளர்களின் சேமிப்பு கணக்கு இட்டு வைப்புகளுக்கு 7.25% வட்டி வழங்குகிறது.**

**71] ம.பி.மாநில அரசு பணமில்லா பரிமாற்றத்தை ஊக்குவிக்க Digital Dakia or Digital Post Man என்ற திட்டத்தை துவக்கியுள்ளது.**

72] 1st Asia Pacific Broadcasting Union International Dance Festival, ஹைதராபாத்தில் நடைபெற்று முடிந்துள்ளது.

73] மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை சார்பில் SEZ India என்ற அலைபேசி செயலி வெளியிடப்பட்டுள்ளது.

74] Nagaland health Project க்காக உலக வங்கி 48 மில்லியன் டாலர் கடனுதவி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த திட்டத்தின் நிறைவு காலம் - மார்ச் 31 / 2023

75] 58வது இந்தியா , சர்வதேச ஆடைகள் கண்காட்சி ( India International Garment Fair ) புதுடெல்லியில் நடைபெற்று முடிந்துள்ளது.

76] உலக பொருளாதார அமைப்பின் சார்பிலான , Inclusive Development Index 2017 (IDI) இந்தியா 60வது இடம் வகிக்கிறது.

77] visa free score ன் படி இந்திய பாஸ்போர்ட் 46 மதிப்பெண்களுடன் 78வது இடம் வகிக்கிறது. ஜெர்மனி, சிங்கப்பூர், ஸ்வீடன் ஆகியன முதல் மூன்று இடத்தில் உள்ளன.

78] NCD - Non Communicable Diseases

- ✓ பிப்ரவரி 04 உலக புற்றுநோய் தினத்தை முன்னிட்டு மத்திய சுகாதார துறையின் சார்பில் இந்தியா முழுவதும் 100 மாவட்டங்களில் ஐந்து தொற்றா நோய்கள் குறித்த விழிப்புணர்வு மற்றும் கண்டறியும் திட்டம் துவங்கப்படுகிறது.

- ✓ 01) உயர் ரத்த அழுத்தம் ., 02) சர்க்கரை நோய் ., 03) வாய் புற்றுநோய் ., 04) மார்பக புற்றுநோய் ., 05) கருப்பை வாய் புற்றுநோய்

79] Comprehensive Conservation Management Plan (CCMP)

- ✓ டார்ஜிலிங் மலை ரயிலின் ( Darjeeling Himalayan Railway ) பாரம்பரியத்தை கட்டி காக்க , இந்திய ரயில்வேக்கும் யுனெஸ்கோ அமைப்புக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

- ✓ [ யுனெஸ்கோ அமைப்பு டார்ஜிலிங் மலை ரயிலை 1999ல் உலக பராம்பரிய அமைப்பாக அறிவித்துள்ளது. ]

**80] மலேசியா மாஸ்டர்ஸ் கிராண்ட பிரிக்ஸ் கோல்டு பேட்மிண்டன் இறுதி போட்டியில் இந்திய வீராங்கனை சாய்னா நேவால் , தாய்லாந்து வீராங்கனை போர்ன்பாவீ சோச்சுவாங்கை [ Pornpawee Chochuwong ] வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.**

- ✓ தனது பாட்மிண்டன் வாழ்க்கையில் 23-ஆவது பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார் சாய்னா.

**81] Combined Commanders Conference (CCC)**

- ✓ முப்படைகளின் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடு , ஜனவரி 21ல் உத்ரகாண்ட் மாநிலத்தின் டேராடூனில் நடைபெற்றுள்ளது. பிரதமர் மோடி இம்மாநாட்டை துவக்கி வைத்தார்.

**82] ரஷிய நாட்டு உதவியுடன் மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் செல்லும் அதிவேக ரயில்கள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன.**

- ✓ முதல் திட்டமாக நாகபுரியில் இருந்து செகந்தராபாத் வரையிலான 575 கி.மீ. தொலைவுக்கு இந்த 200 கி.மீ. வேக ரயிலை இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

- ✓ இந்தியாவில் இப்போதைய அதிவேக ரயில் கதிமான் எக்ஸ்பிரஸாகும். இந்த ரயில் ஒரு மணி நேரத்தில் 160 கி.மீ. தொலைவைக் கடக்கும்.

**83] நாட்டிலேயே முதன்முறையாக சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தபால் வாக்குகளை மின்னணு முறையில் அனுப்பும் திட்டம் கோவாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.**

- ✓ [ கோவாவில் ராணுவம், துணை ராணுவப் படைப் பிரிவுகளைச் சேர்ந்த 822 பேர் வாக்களிக்க உள்ளனர். இவர்களுக்கான தபால் வாக்குகளை தேர்தல் அலுவலர்கள் மின்னணு முறையில் அனுப்பி வைப்பர். அவற்றை சம்பந்தப்பட்ட வீரர்கள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, அவற்றை நிரப்பிய பின் மின்னஞ்சல் வாயிலாக தேர்தல் அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.]

**84] உலகில் முதல் நாடாக நார்வே , பண்பலை வானொலி ( FM radio ) ஒளிபரப்புகளை நிறுத்தி விட்டு , Digital audio broadcasting (DAB)ஐ துவக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.**

85] Dis /Ability Communication: Perspectives and Challenges in the 21st Century (ICDC-2017) என்ற சர்வதேச மாநாடு மும்பையில் நடைபெற்றுள்ளது.

86] பாரம்பரிய இசை , நடனம், சூபி இசை, உணவு திருவிழா, யோகா, திரைப்பட விழா ஆகியவை இணைந்த " இந்திய திருவிழா - Festival of India " கானா நாட்டில் ஜனவரி 25 முதல் மார்ச் 16 / 2017 வரை நடைபெறுகிறது.

87] துள்ளி குதித்து தாண்டி செல்லும் கலையான Parkour ஐ விளையாட்டு பிரிவில் பிரிட்டன் , உலகில் முதல் நாடாக சேர்த்துள்ளது.

88] My Odyssey : Memoirs of the Man behind the Mangalyaan Mission

- ✓ எழுதியவர் --- முன்னாள் இஸ்ரோ சேர்மன் டாக்டர் ராதாகிருஷ்ணன். ( நிலஞ்சன் ரூத் உடன் இணைந்து எழுதியுள்ளார் )

89] மேம்பட்ட சாட்டிலைட் ஏவு தொழில்நுட்பத்தை பெறுவதற்கு ISRO , பிரான்ஸ் நாட்டின் French Space Agency உடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

90] Young Travel Photographer of the Year 2016 விருது பெற்றவர் --- இந்தியாவை சார்ந்த 14 வயதான Darpan Basak

91] Young Travel Photographer -- 14 years old and under -- in the 'Places and Experiences' பிரிவில் வருது பெற்றவர் - இந்தியாவை சார்ந்த 13 வயதான Ankit Kumar

92] 21வது தேசிய இளைஞர் விழா ஹரியானா மாநிலம் ரோடக் நகரில் நடைபெற்றுள்ளது. மாநாட்டின் கருப்பொருள். -- Youth for digital India

93] The International Conference and Exhibition on Reinforced Plastics (ICERP) -- 2017 மும்பையில் நடைபெற்றுள்ளது.

94] நோபல் பரிசு பெற்றவர்களுடான சந்திப்பு மற்றும் 5 வார அறிவியல் கண்காட்சியை பிரதமர் மோடி ஜனவரி 03ல் அகமதாபாத்தில் துவக்கி வைத்துள்ளார். [ Nobel Prize Series, India 2017 & 5-week long Science Exhibition ]

95] அஸ்ஸாம் மாநில அரசு Tokapoisa.in என்ற மின்னணு பணப்பையை ( e - wallet ) அறிமுகம் செய்துள்ளது.

**96] நீர் மேலாண்மையில் உள்ள பல்வேறு இடர்களை களைவது பற்றிய கலந்துரையாடல் கூட்டம் Jal Manthan - 3 புதுடெல்லியில் நடைபெற்றுள்ளது.**

**97] மகாநதி மற்றும் அதன் கிளை நதிகளின் நீரை பங்கிட்டு கொள்வதில் ஒடிஷா , சட்டீஸ்கர், ஜார்கண்ட், ம.பி., மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களுக்கிடையே சமரசம் ஏற்படுத்த மத்திய நீர்வளத்துறை 11 நபர் குழுவை ஏற்படுத்தியுள்ளது.**

- ✓ இதன் தலைவராக மத்திய நீர்வள ஆணையத்தின் உறுப்பினர் ( நீர் மேலாண்மை மற்றும் திட்டங்கள் ) நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**98] இந்திய பெருங்கடல் அமைப்பு நாடுகளுக்கு இடையிலான , சிறு மற்றும் குறுந்தொழில் புரிந்துணர்வு கூட்டம் புதுடெல்லியில் ஜனவரி 19 - 21வரை நடைபெற்றுள்ளது. Workshop on MSME Cooperation amongst Indian Ocean Rim Association (IORA) Member Countries**

**99] இந்திய பொருளாதாரம் மற்றும் உட்கடடமைப்பு வசதிகள் குறித்த பயனுள்ள குறிப்புகள்**

- ✓ இந்தியா மிகப் பெரிய மக்கள் தொகையைக் கொண்டது. குறிப்பாக அதிக இளைஞர்கள் கொண்ட நாடு. தொழில்வளர்ச்சி என்பது நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமானது. தொழில் வளர்ச்சியை மேம்படுத்த அதற்கேற்ப உள்கட்டமைப்பு வசதிகளும் கொள்கைகளும் இருக்கவேண்டும். அப்போதுதான் வெளிநாட்டிலிருந்து நிறுவனங்கள் இந்தியாவுக்கு தொழில்தொடங்குவதற்கு வருவார்கள். சமீப காலமாக இந்தியா இதில் கவனம் செலுத்தி வருகிறது. கொள்கை மாற்றமும் அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன.

- ✓ 130 - தொழில்புரிவதற்கு உகந்த சூழல் உள்ள நாடுகள் பட்டியலில் இந்தியா 2016வது வருடம் பிடித்த இடம். இந்தியா 2015ம் வருடத்தை விட ஒரு இடம் முன்னேறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

- ✓ 110 ஸ்மார்ட் நகரங்களை 2022-ம் ஆண்டுக்குள் உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் நகரங்களும் தேர்வு செய்யப்பட்டு விட்டன.

- ✓ இந்தியாவில் மொத்தம் முதலீட்டு பிராந்தியங்களின் எண்ணிக்கை 24.

- ✓ இந்தியாவில் உள்ள கிரின்பீல்டு நகரங்களின் எண்ணிக்கை 8.

- ✓ ரயில்வே போக்குவரத்தில் இந்தியாவின் இடம் 3.

- ✓ இந்தியாவில் தொழில்துறை இணைப்பு நகரங்களின் எண்ணிக்கை 5

- ✓ 1.டெல்லி - மும்பை
- ✓ 2.அமிர்தரஸ் - கொல்கத்தா
- ✓ 3.பெங்களூரு - மும்பை
- ✓ 4.சென்னை - பெங்களூரு
- ✓ 5.சென்னை - விசாகப்பட்டினம்

இந்த இணைப்பு நகரங்கள் வழியே இந்தியாவின் மிக முக்கியமான 10 நகரங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

- ✓ **27,000 கிலோமீட்டருக்கு, பொருளாதார வகையில் பயன்தரக்கூடிய இணைப்பு நெடுஞ்சாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன.**

- ✓ சர்வதேச அளவில் இரண்டாவது பெரிய சாலை அமைப்பைக் கொண்டது இந்தியா. இந்தியாவில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் தூரம் 1,00,000 கிலோமீட்டர்

- ✓ சாகர்மாலா திட்டத்தின் கீழ் துறைமுகங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் குளச்சல் துறைமுகம் திட்டமும் மத்திய அரசால் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் முக்கியமான துறைமுகங்களை பொருளாதார மையங்களாக மாற்றவும் திட்டமிட்டு வருகிறது.

- ✓ வர்த்தக மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு வழங்கும் உலகின் மிகச் சிறந்த முதலீட்டு மேம்பாடு விருது இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.

- ✓ பாதுகாப்புத் துறையில் அனுமதிக்கப்பட்ட அந்நிய முதலீடு வரம்பு 49%

- ✓ சர்வதேச அளவில் மிகப் பெரிய ஆயுதப் படைகளை வைத்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் இடம் 3.

- ✓ சர்வதேச அளவில் பாதுகாப்புத்துறைக்கு அதிக செலவிடும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவின் இடம் 4.

- ✓ 2022-ம் ஆண்டுக்குள் மொத்தம் 2 கோடி வீடுகள் கட்டித் தருவதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

- ✓ 2025-ம் ஆண்டுக்குள் 99% படிப்பறிவு பெற்ற சமூகமாக இருக்கும்.

- ✓ புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்களுக்கு இந்தியா மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் மூலம் 2022-ம் ஆண்டுக்குள் இந்தியா 175 ஜிகா வாட் மின்சார உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.

- ✓ புதுமை, பொருளாதார வளர்ச்சியை ஊக்கப்படுத்துவது, வேலைவாய்ப்பை அதிகரிப்பது, தொழில் முனைவோர்களை உருவாக்குவது போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து தேசிய அறிவுசார் சொத்துரிமை கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

- ✓ திவால் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் தாமதம் ஏற்பட்டால் பெரும் பொருளாதார பின்னடைவும், தொழில் செய்ய முடியாத சூழ்நிலையும் உண்டாகும். எனவே, எவ்வளவு விரைவில் தீர்வு காணப்படுகிறதோ, அது தொழில் துறைக்கும் பொருளாதாரத்துக்கும் நல்லது. நிறுவனங்களுக்கு திவால் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் மத்திய அரசு திவால் சட்டம் 2016 கொண்டுவந்துள்ளது.

- ✓ 2015-16-ம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்துள்ள அந்நிய நேரடி முதலீட்டின் மதிப்பு 5550 கோடி டாலர்

- ✓ அரசுக்கும் தொழில்நிறுவனங்களுக்கும் இடையேயான உறவை மேம்படுத்துவதற்காக முதன்முதலில் தொடங்கப்பட்டது இ-பிஸ் இணையதளம். இந்த இணையதளத்தின் மூலம் தொழிலுக்கான அனுமதி, தடையில்லா அனுமதி சான்று போன்றவை இதன் மூலம் வழங்கப்படுகின்றன.

- ✓ அரசு-தனியார் கூட்டுக் நிறுவனங்கள் பொருளாதாரத்தில் இந்தியாவின் இடம் 3

- ✓ 2020-ம் ஆண்டுக்குள் இ-காமர்ஸ் துறை 1,000 கோடி டாலர் மதிப்பு கொண்டதாக உயரும்.

- ✓ 2016-ம் ஆண்டு இந்தியாவில் பிராட்பேண்ட் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 19.2 கோடி

- ✓ நாடு முழுவதும் ஒரே வரி அமைப்பை கொண்டு வரும் வகையில் சரக்கு மற்றும் சேவை வரி மசோதா கடந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த ஆண்டு பிற்பாதியில் இந்த வரி அமைப்பு நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**100] முதன்முறையாக INS விக்ரமாதித்யா போர்க்கப்பலில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா சார்பில் ATM வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது .**

**101] பிசிசிஐ மறுசீரமைப்பு விவகாரத்தில், லோதா குழு பரிந்துரைகளை அமல்படுத்தத் தவறியதற்காக பிசிசிஐ தலைவர் பதிவியில் இருந்து உச்சநீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்ட அனுராக் தாக்குர், ஹிமாசல பிரதேச ஒலிம்பிக் சங்கத் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

**102] ஆந்திர மாநிலத்தில் சித்தூர், கடப்பா, பிரகாசம், கிருஷ்ணா, கர்னூல், அனந்தபூர் ஆகிய 6 மாவட்டங்களில் தங்கச் சுரங்கங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

- ✓ சித்தூர் மாவட்டத்தில் சாதுகொண்டா, தம்பளபல்லி பகுதிகளில் தங்கம் மட்டுமல்லாது, இரும்பு, வெள்ளி, செம்பு, ஈயம் உள்ளிட்டவற்றின் தாதுப் பொருட்களும் உள்ளது தெரிய வந்துள்ளது.

**103] பிஹாரில் முதல்வர் நிதிஷ் குமார் தலைமையிலான அரசு கொண்டுவந்த மது விலக்கு நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து, நேற்று 11,292 கிமீ தொலைவுக்கு உலகின் மிக நீளமான மனித சங்கிலி அமைக்கப்பட்டது.**

- ✓ இஸ்ரோ அமைப்பின் இரு செயற்கைக்கோள்கள் வெளிநாட்டைச் சேர்ந்த ஒரு செயற்கைக்கோள், 4 விமானங்கள், 2 ஹெலிகாப்டர்கள், 40 ட்ரோன் விமானங்கள் மூலமாக இந்த மனித சங்கிலி நிகழ்வு படம் எடுக்கப்பட்டது.

- ✓ 2004-ம் ஆண்டில் வங்கதேசத்தில் 1,050 கிமீ தொலைவுக்கு மனித சங்கிலி அமைக்கப்பட்டது. இதுதான் இதுவரையில் மிக நீளமான மனித சங்கிலி என்ற சாதனையை பெற்றிருந்தது. இது இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

**104] குஜராத் மாநிலம், ராஜ்காட் மாவட்டம், காக்வாட் நகரில் புதிதாக அம்மன் கோவில் கட்டப்பட்டுள்ளது. அந்த கோவிலில் அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட நிகழ்ச்சியின்போது 3.5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தேசிய கீதத்தை பாடி புதிய உலக சாதனை படைத்தனர்.**

- ✓ இதற்கு முன்பு கடந்த 2014-ம் ஆண்டில் வங்கதேசத்தில் 2.54 லட்சம் பேர் சேர்ந்து அந்த நாட்டு தேசிய கீதத்தை பாடியது உலக சாதனையாக இருந்தது. அந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது. குஜராத் தேசிய கீத சாதனை கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

**105] கறுப்புப் பணத்தை கணக்கில் கொண்டு வருவதற்காக கொண்டுவந்துள்ள பிரதம மந்திரி கரிப் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் (பிஎம்ஜிகேஒய்) டெபாசிட்டுகளை கூட்டுறவு வங்கிகள் ஏற்பதற்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.**

**106] 5 பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் பங்குச்சந்தையில் பட்டியலிடுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது. [ நியூ இந்தியா அஸ்யூரன்ஸ், நேஷனல் இன்ஷூ ரன்ஸ் கம்பெனி, ஓரியண்டல் இன் ஷூரன்ஸ், யுனைடெட் இந்தியா இன்ஷூரன்ஸ் மற்றும் ரீ இன்ஷூ ரன்ஸ் பிரிவை சேர்ந்த ஜிஐசி ]**

- ✓ காப்பீட்டு துறையில் அந்நிய நேரடி முதலீடு தற்போது 49 சதவீதமாக இருக்கிறது. முன்பு 26 சதவீதமாக இருந்தது.

**107] அழிந்து வரும் பூச்சி இனம் ஒன்றுக்கு டொனால்ட் ட்ரம்பின் பெயரை விஞ்ஞானிகள் வைத்துள்ளனர். டொனால்ட் ட்ரம்பின் தலைமுடி போல அதற்கும் இருப்பதால் அதே பெயரை வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

- ✓ " நியோபால்பா டொனால்ட்ரம்பி " என்ற பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த புதிய வகைப் பூச்சியின் தலையில் மஞ்சளும் வெண்மையும் கலந்த நிறத்தில் செதில்கள் உள்ளன.

- ✓ ஒட்டாவாவைச் சேர்ந்த பரிணாம உயிரியில் விஞ்ஞானி வாஸ்ரிக் நஸாரி இந்த செதில்களைப் பார்த்ததும் ட்ரம்பின் தலைமுடியைப் போல் இருப்பதை உணர்ந்து இப்படிப் பெயரை வைத்துள்ளார்.

## 108] நடப்பு நிகழ்வுகள் வினாக்கள் விடைகள்

01) பொது இடங்களில் / காலியிடங்களில் குப்பைகளை எரிப்பவர்கள் மீது எவ்வளவு அபராதம் விதிக்கப்படும் பசுமை தீர்ப்பாயம் தெரிவித்துள்ளது? **விடை -- ரூ 25,000**

02) Epsilon - 2 ? **விடை -- ஜப்பான் அனுப்பிய திட எரிபொருள் ராக்கெட்**

03) கின்னஸ் சாதனை படைக்கப்பட்ட , அதிகளவு பெண்கள் கலந்து கொண்ட தற்காப்பு கலை பயிற்சி வகுப்பு எங்கு நடைபெற்றது?

**விடை -- தெலுங்கானா மாநில வாரங்கல் மாவட்ட காவல்துறை ஏற்பாடு செய்த நிகழ்ச்சி** ( **21,276 பேர்** )

04) மலேசியாவில் நடைபெற்ற குழந்தைகள் கோல்ப் உலக சாம்பியன் போட்டியில் வென்ற இந்திய சிறுவன் யார் ? **விடை -- Arjun Bhati**

05) Indian Institute of Corporate Affairs (IICA ) டைரக்டர் ஜெனரலாக நியமனம் செய்யப்படவர் யார் ? **விடை. --- சுனில் அரோரா**

06) கொச்சியில் துவங்கப்பட்டுள்ள, இந்தியாவின் முதல் மூன்றாம் பாலினத்தவர் பள்ளியின் பெயர் என்ன ? **விடை. --- Sahaj international school**

07) பணமில்லா பரிவர்தனையை இளைஞர்களிடம் ஊக்குவிக்க , மத்திய இளைஞர் நலம் மற்றும் விளையாட்டு துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்ட பிரச்சார இயக்கம் என்ன? **விடை. -- #youth4digitalpaisa**

08) எகிப்து நாட்டின் எந்த பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப சிறப்பு மையத்தை அமைக்க இந்தியா ஒத்துக்கொண்டுள்ளது.? **விடை. -- Al Azhar University**

09) [i ] வாசகர் விருப்பத்தின் அடிப்படையில் டைம் நாளிதழ் 2016 சிறந்த மனிதர் யார் ? [ii] டைம் நாளிதழ் 2016 சிறந்த மனிதர் யார் ? **விடை. -- (i ) மோடி ., ( ii ) டொனால்ட் டிரம்ப்**

10) உலகின் முதல் water - wave laserஐ உருவாக்கியவர்கள் யார்? **விடை. -- பேராசிரியர் Tal Carmon தலைமையிலான Technion Israel Institute of Technology Scientists**

11) ஜெய்ப்பூரில் நடைபெற்ற தேசிய குழந்தைகள் திரைப்பட விழாவின் கருப்பொருள் ( Theme ) என்ன ? **விடை. - Make in India**

12) International Conference on Decarbonisation of Indian Railways – Mission Electrification எங்கு நடைபெற்றது? **விடை - புதுடெல்லி**

13) 1st International Agro - biodiversity Congress எங்கு நடைபெற்றது? **விடை. --- புதுடெல்லி**

14) ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் chhamp பகுதிகளில் இருந்து இந்தியாவிற்கு புலம் பெயரந்தோருக்கான மறுவாழ்வுக்காக இந்தியா ஒதுக்கீடு செய்த தொகை எவ்வளவு?

**விடை. -- ரூ. 2000 கோடி**

15) சுவிட்சர்லாந்து நாட்டின் சுற்றுலா துறை தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்? அந்நாட்டின் சுற்றுலா பிரசார வாசகம் என்ன ? **விடை. --- ரன்வீர் சிங் . , 2017 – Nature wants you back**

16) Pradhan Mantri Surakshit Matritva Abhiyan என்பது எந்த திட்டம் தொடர்பானது?

**விடை - கருவுற்ற தாய்மார்களுக்கான மாதாந்திர பரிசோதனை திட்டம் ( முதல் 6 மாதம் வரை )**

17) Tata Literature Live! Lifetime Achievement Award வென்றவர் யார்?

**விடை. --- அமிதவ் கோஷ்**

18) Reporters without Borders (RSF)-TV5 Monde prize' வென்றவர் யார்?

**விடை. --- Hadi Abdullah ( syria )**

19) திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாநிலம் என்ற தகுதியை அடைந்துள்ள மூன்று மாநிலங்கள் எவை? **விடை -- சிக்கிம், இமாச்சல பிரதேசம் , கேரளா**

20) விவசாயிகளுக்கு மானிய விலையில் சூரிய மின் சக்தி மோட்டார் விசை பம்புகள் வழங்கும் திட்டம் எது? **விடை -- Saur SujalaYojana ( சட்டீஸ்கரில் துவக்கி வைக்கப்பட்டது )**

**109] அமெரிக்காவில் ஜார்ஜியா மாகாணத்தில் 1000 புத்தகங்கள் படித்ததால், பாலியாமேரி அரானா என்ற 4 வயது சிறுமி நூலகர் ஆனாள்.**

- ✓ இதன் மூலம் உலகிலேயே மிக குறைந்த வயதில் நூலகரான சிறுமி என்ற பெருமையை பாலியாமேரி அரானா பெற்றாள்.

**110] இமாச்சல பிரதேசத்தின் தலைநகராக சிம்லா உள்ளது. இந்நிலையில் ' தரம்சாலாவை " இமாச்சல பிரதேசத்தின் இரண்டாவது தலைநகராக அம்மாநில முதல்வர் வீரபத்ர சிங் அறிவித்துள்ளார்.**

- ✓ தரம்சாலா கங்க்ரா மாவட்டத்தின் தலைநகரம் ஆகும். தற்போதைய தலாய்லாமா டென்சின் கியாட்சோ இங்கு தான் வாழ்கிறார்.

**111] ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்த மத்திய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் எழுத்தாளர் லஷ்மி சரவணக்குமார் தனக்கு வழங்கப்பட்ட யுவபுரஸ்கார் விருதினை திரும்ப அளித்தார்.**

- ✓ கானகன் என்ற நூலுக்காக, லஷ்மி சரவணக்குமாருக்கு யுவபுரஸ்கார் விருது வழங்கப்பட்டது.

**112] அகில இந்திய கால்பந்து சம்மேளனத்தின் (ஏஐஎஃப்எஃப்) தலைவர் பிரஃபுல் படேல், சர்வதேச கால்பந்து சங்கங்கள் சம்மேளனத்தின் (ஃபிஃபா) நிதிக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டடுள்ளார்.**

**113] பூமியில் அழிந்து போன உயிரினங்களை மீண்டும் உருவாக்க வேண்டுமானால் அதற்கு குறைந்தபட்சம் 80 லட்சம் ஆண்டுகள் ஆகும் என்று அமெரிக்காவில் உள்ள ஸ்டோனி புரூக் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.**

**114] உலகின் 58 சதவீத சொத்துக்கள் 8 கோடீஸ்வரர்களின் கையில் இருப்பதாகவும் இதுவே உலகளவில் 50 சதவீதமாக உள்ளது என ஆக்ஸ்போம் (Oxfam) என்ற பொருளாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

- ✓ சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச பொருளாதார அமைப்பின் வருடாந்திர கூட்டத்தில், ஆக்ஸ்போம் நிறுவனம் "பொருளாதாரம் 99 சதவீதம்" என்ற தலைப்பில் இந்த புள்ளி விபரங்களை வெளியிட்டுள்ளது.

- ✓ அவர்களில் 6 பேர் அமெரிக்க வர்த்தகர்கள் தலா ஒருவர் ஸ்பெயின் மற்றும் மெக்சிகோவை சேர்ந்தவர்கள் ஆவர்.

- ✓ மைக்ரோசாப்ட் கம்ப்யூட்டர் நிறுவனர் பில்கேட்ஸ் முதலிடத்தில் உள்ளார். அவரது சொத்து மதிப்பு 743 கோடி டாலர்.

- ✓ 2-வது இடத்தில் ஸ்பானிஷ் அமான்சியோ ஆர்டேகா (amancio ortega) நிறுவனத்தின் சொத்து மதிப்பு 67 பில்லியன் (ரூ.663 கோடி டாலர்).

- ✓ 3-வது இடத்தில் அமெரிக்காவின் வாரன் பப்பெட் 60.8 பில்லியன் (602 கோடி டாலர்).

- ✓ ஆக்ஸ்போம் அறிக்கையின்படி, இந்தியாவில் வசிக்கும் 84 பில்லியனர்கள் கையில் 248 பில்லியன் மதிப்புள்ள சொத்துக்கள் இருக்கிறது.

- ✓ ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானி 19.3 பில்லியன் சொத்து மதிப்புடன் முதலிடத்தில் உள்ளார். சன் பாராமெடிக்கல்ஸ் அதிபர் திலிப் சங்வி 16.7 பில்லியன் சொத்து மதிப்பு வைத்துள்ளார். விப்ரோ நிறுவனர் ஆஷிம் பிரேம்ஜி 15 பில்லியன் டாலர் சொத்து வைத்துள்ளார்.

- ✓ ஷிவ் நாடார் (1,110 பில்லியன் டாலர்), சைரஸ் பூனாவாலா (850 பில்லியன் டாலர்), லஷ்மி மிட்டல் (840 பில்லியன் டாலர்), உதய் கோடக் (630 பில்லியன் டாலர்), குமார் மங்களம் பிர்லா (610 பில்லியன் டாலர்). இந்தியாவின் மொத்த சொத்து மதிப்பு 3.1 டிரில்லியன் ஆகும்.

**115] விக்கிலீக்ஸ் வலைதளத்திடம் ராணுவ ரகசியங்களைக் கசிய விட்டமைக்காக அமெரிக்க ராணுவ வீராங்கனை செல்ஸீ மேன்னிங்குக்கு விதிக்கப்பட்டிருந்த 35 ஆண்டு கால சிறைத் தண்டனையை 7 ஆண்டாகக் குறைத்து அதிபர் ஒபாமா உத்தரவிட்டுள்ளார்.**

- ✓ [ பிராட்லி மேன்னிங் என்ற பெயரில், ராணுவத்தின் பகுப்பாய்வுப் பிரிவில் பணியாற்றி வந்த செல்ஸீ மேன்னிங், பிறகு தன்னை திருநங்கையாக அறிவித்துக் கொண்டார்.]

**116] உலகம் முழுவதும் இனவெறியை எதிர்த்துப் போராடி வரும் தென்னாப்பிரிக்காவின் அகமது கத்ராடா அறக்கட்டளைக்கு இந்தியா சார்பில் ரூ.1 கோடி ( 2 மில்லியன் ராண்ட் ) நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.**

- ✓ [ தென்னாப்பிரிக்காவில் உள்ள நெல்சன் மண்டேலாவின் அறக்கட்டளைக்கு இந்தியா சார்பில் கடந்த டிசம்பரில் ரூ.1 கோடி நன்கொடை வழங்கப்பட்டடுள்ளது ]

**117] கேரளத்தில் தெரு நாய்களால் மனித உயிர்கள் பலியாகும் விவகாரம் தொடர்பாக விசாரிக்க கேரள உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஸ்ரீ ஜெகன் தலைமையில் ஒரு குழு உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில் அமைக்கப்பட்டுள்ளது.**

**118] பிளாஸ்டிக் இல்லா மாநிலத்தை உருவாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் பால்பாயிண்ட் பேனாக்களை உபயோகிப்பதை தவிர்த்து மை பேனாக்களை உபயோகிக்கும் வகையில் விழிப்புணர்வு பிரச்சாரம் கேரளாவில் துவங்கப்பட்டுள்ளது.**

**119] பழைய ரூ500 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற இந்திய அரசு அறிவித்தன் எதிரொலியாக நேபாளத்தில் கடும் சில்லரை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.**

- ✓ சில்லரை தட்டுப்பாட்டை சமாளிக்க நேபாள நாட்டிற்கு ரூ.100 கோடி மதிப்புள்ள ரூ.100 நோட்டுகளை வழங்க இந்தியா முடிவு செய்துள்ளது.

**120] சர்வதேச அளவில் வேகமாக வளர்ந்து வரும் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நிகழாண்டில் 7.6 சதவீதம் முதல் 7.7 சதவீதம் வரை இருக்கும் என்று ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

- ✓ ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் ஏற்பட்டும் விளைவுகள் இதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
- ✓ [ முன்னதாக, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் 7.6 சதவீதத்தில் இருந்து 7.1 சதவீதமாகக் குறையும் மத்திய அரசு சார்பில் மதிப்பிடப்பட்டிருந்தது. ]

**121] Swachhta Doots ( Cleanliness Ambassadors )**

- ✓ கங்கை நதியின் தூய்மையைக் காப்பதற்காக 20,000 இளைஞர்களை தூய்மைத் தூதர்களாக நியமிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- ✓ உத்தரகண்ட், உத்தரப் பிரதேசம், பிகார், மேற்கு வங்கம் ஆகிய கங்கை நதி பாயும் மாநிலங்களில் நதிக்கரையோர கிராமங்களில் இருந்து 20,000 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் தூய்மைத் தூதர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

- ✓ கங்கையையும், நதிக்கரையையும் தூய்மையாகப் பராமரிப்பது குறித்து அவர்களுக்கு உரிய பயிற்சியும் அளிக்கப்படவுள்ளது. [ கங்கை நதிக்கரையோரத்தில் உள்ள 29 மாவட்டங்களைச் சேர்ந்த 2,336 கிராமங்களில் இருந்து இந்த 20,000 தூய்மைத் தூதர்களும் நியமிக்கப்படவுள்ளனர். ]

**122] கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.) இறுதித் தேர்வு- பொது செயல்திறன் தேர்வுகளில் லக்னௌவைச் சேர்ந்த மாணவி எடி அகர்வால் 800-க்கு 599 மதிப்பெண்களை பெற்று அகில இந்திய அளவில் முதல் இடம் பெற்றுள்ளார்.**

- ✓ பிவாண்டியைச் சேர்ந்த பியூஷ் ரமேஷ் லோஹியா 574 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடமும், ஆமதாபாத்தைச் சேர்ந்த ஜோதி முகேஷ்பாய் மகேஸ்வரி 566 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடமும் பிடித்துள்ளனர்.

- ✓ 2015 நவம்பரில் சென்னையைச் சேர்ந்த ஜேம்ஸ் ஜான் பிரிட்டோ 595 மதிப்பெண்களுடன், 2016 மே மாதத்தில் சேலத்தைச் சேர்ந்த மாணவர் எஸ். ஸ்ரீராம் 613 மதிப்பெண்களுடன் அகில இந்திய அளவில் முதலிடங்களைப் பெற்றிருந்தனர்.

**123] தில்லியில் கடந்த 1980 மற்றும் 1990-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற குடியரசு தின விழாக்களில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட "மருத்' என்ற போர் விமானங்கள் கடைசியாகப் பங்கேற்றன.**

- ✓ அதன் பிறகு முதன் முறையாக, தில்லியில் வரும் 26-ஆம் தேதி நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் "தேஜஸ்' ரக போர் விமானம் முதன் முறையாக பங்கேற்று சாகசத்தில் ஈடுபட உள்ளது.

- ✓ இதுதவிர, மி-17 ரக ஹெலிகாப்டர்கள், சுகோய் சு-30 போர் விமானங்கள், இலகுரக ருத்ரா ஹெலிகாப்டர்கள், சி-17 குளோப் மாஸ்டர் ரக ராணுவப் போக்குவரத்து விமானங்கள் ஆகியவையும் வான்சாகசங்களை நிகழ்த்த உள்ளன.

### 124] ShaGun

- ✓ அனைவருக்கும் கல்வி ( சர்வ சிக்சா அபியான் ) திட்டத்தை கண்காணிப்பதற்காக " ஷாகன் " எனப்படும் புதிய வலைதள அமைப்பை மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் துவக்கி வைத்துள்ளார்.

### 125] IITகளில் பெண்களுக்கு 20% இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என Timothy Gonsalves தலைமையிலான கமிட்டி பரிந்துரை வழங்கியுள்ளது.

### 126] Global index of talent competitiveness (GTI) 2017

- ✓ போட்டித்திறமைகளுக்கான சர்வதேச குறியீட்டில் இந்தியா 92வது இடம் வகிக்கிறது.

- ✓ சுவிட்சர்லாந்து , 02) சிங்கப்பூர் , 03) பிரிட்டன்..., 54) சீனா , 56) ரஷ்யா , 67) தென்னாப்பிரிக்கா , 81) பிரேசில்

### 127] CERN [ The European Organization for Nuclear Research ] அமைப்பில் இந்தியா இணை உறுப்பினராக ( Associate Membership ) இணைந்துள்ளது.

- ✓ ஏற்கனவே 2004 முதல் இந்த அமைப்பில் பார்வையாளர் நாடாக இந்தியா உள்ளது.

### 128] Mission 41K

- ✓ அடுத்த பத்தாண்டுகளுக்குள் 50% உள்ள டீசல் என்ஜின்களின் பயன்பாட்டை குறைத்து , 90% அளவிற்கு மின்சார இன்ஜின்களை இயக்குவதின் மூலமாக 41,000 கோடி ரூபாய்களை சேமிப்பதற்கு Mission 41K என்ற திட்டத்தை இந்திய ரயில்வே துறை அறிவித்துள்ளது.

### 129] 2nd Raisina Dialogue

- ✓ இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இரண்டாவது ரைசினா பேச்சுவார்த்தை மாநாடு, புதுடெல்லியில் ஜனவரி 17 - 19 வரை நடைபெற்று முடிந்துள்ளது.

- ✓ மாநாட்டின் கருப்பொருள் - The New Normal : Multilateralism with Multi Polarity

**130] CBIயின் புதிய இயக்குநராக , டெல்லி காவல்துறை ஆணையர் அலோக் குமார் வர்மா நியமனம் செய்யப்பட்டுள்ளார்.**

- ✓ பிரதமர் மோடி , உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மக்களவை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே ஆகியோர் அடங்கிய குழு இவரை தேர்வு செய்துள்ளது.

- ✓ CBI இயக்குநராக பதவி வகித்து வந்த அனில் சின்ஹா டிசம்பர் 02ல் ஓய்வு பெற்ற பின் , இடைக்கால இயக்குநராக ராகேஷ் அஸ்தானா நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

**131] 2016ம் ஆண்டுக்கான தேசிய வீரதீர விருது 12 சிறுமிகள் மற்றும் 13 சிறுவர்களுக்கு ( மொத்தம் 25 பேர் ) வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 4 பேருக்கு மரணத்திற்கு பிந்தைய விருதாக வழங்கப்பட்டுள்ளது.**

- ✓ பாரத் விருது --- பிஜூ ( Tarh Peeju )
- ✓ கீதா சோப்ரா விருது -- தேஜஸ்வீதா பிரதான் & ஷிவானி காண்ட்
- ✓ சஞ்சய் சோப்ரா விருது -- சுமித் மம்கெயின்
- ✓ பாபு ஹைதானி விருது -- Roluahpuii , Tushar Verma & H Lalhriatpuii

- ✓ மற்றவர்கள் அனைவருக்கும் தேசிய வீரதீர பொது விருது அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 23ல் பிரதமர் மோடி இந்த விருதுகளை வழங்குகிறார்.

**132] அமெரிக்காவின் ' கீப்பர் செக்யூரிட்டி ' என்ற கடவுச்சொல் [ Password ] மேலாண்மை நிறுவனம், 2016ம் ஆண்டில் அதிகம் பயன்படுத்தப்பட்ட 10 கடவுச்சொற்களை பட்டியலிட்டுள்ளது.**

- ✓ 123456
- ✓ 123456789
- ✓ Qwerty
- ✓ 12345678
- ✓ 111111
- ✓ 1234567890
- ✓ 1234567
- ✓ 123123
- ✓ 987654321
- ✓ Password

**133] " இந்தியாவின் கருந்துளை மனிதர் " என அழைக்கப்பட்ட விஞ்ஞானி சி.வி. விஸ்வேஸ்வரா வயது முதிர்வால் காலமானார்.**

- ✓ கடந்த 1970ம் ஆண்டு , கருந்துளை எப்படி இருக்கும்? அதன் வடிவம் எவ்வாறு இருக்கும்? என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்.
- ✓ 130 கோடி ஆண்டுகளுக்கு முன் இரண்டு ராட்சத கருந்துளைகள், ஒன்றையொன்று சுற்றிக்கொண்டே மோதியபோது ஏற்பட்ட ஈர்ப்பலைகளின் வடிவத்தை வரைந்தவர் இவர்.

**134] Project Nanjunda**

- ✓ பிளிப்கார்ட் நிறுவனம் தங்களது டெலிவரி ஊழியர்களின் பாதுகாப்பு தேவைகளுக்காக " புராஜெக்ட் நஞ்சுண்டா " என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.
- ✓ இந்த திட்டத்தின் கீழ் அவசர காலங்களில் டெலிவரி ஊழியர்கள் / களப்பணியாளர்கள் அருகிலுள்ள டெலிவரி மையங்களில் உதவி கோர முடியும்.

**135] நேரலை கண்காணிப்பு திட்டம்**

- ✓ ஆனைமலை புலிகள் காப்பகத்தில் முதல் முறையாக ' அகஇணையம் ' எனப்படும் " இன்ட்ராநெட் "மூலம் வனத்தை நேரலையில் கண்காணிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- ✓ உத்தரகாண்டில் உள்ள கார்பெட் தேசிய பூங்காவிலும், திருவள்ளுவர் மாவட்டத்தில் செம்மர கடத்தலை தடுக்கவும் இந்த நேரலை கண்காணிப்பு திட்டம் ஏற்கனவே நடைமுறையில் உள்ளது.

**136] ஐரோப்பிய நாடாளுமன்ற தலைவராக , இத்தாலி நாட்டைச் சேர்ந்த Antonio Tajani தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

**137] Operation Sard Hawa**

- ✓ எல்லை பாதுகாப்பு படையின் சார்பில் ராஜஸ்தானில் உள்ள எல்லைப் பகுதியில் ஜனவரி 15 முதல் 28 வரை Operation Sard Hawa நடைபெறுகிறது.

**138] 28வது சாலை பாதுகாப்பு வாரம் 2017 ஜனவரி 17 முதல் 23 வரை கடைபிடிக்கப்படுகிறது.**

- ✓ கருப்பொருள். --- உங்கள் பாதுகாப்பு உங்கள் குடும்பத்தை காக்கும் ; சாலையில் விழிப்புடன் இருப்பீர்

**139] எம். ஜி.ஆர். அவர்களின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு மத்திய அரசின் சார்பில் * 15 மதிப்பில் தபால்தலையும் , * 11 மதிப்பிலான அஞ்சல் உறையும் வெளியிடப்பட்டுள்ளது.**

- ✓ ஏற்கனவே 1990ல் ₹60 மதிப்பில் எம். ஜி. ஆர். நினைவு தபால்தலை வெளியிடப்பட்டுள்ளது.

**140] 24th International Camel Festival**

- ✓ 24வது சர்வதேச ஒட்டக திருவிழா, ராஜஸ்தானின் பிகானீரில் நடைபெற்று முடிந்துள்ளது.

**141] ரயில் கட்டணத்தில் மூத்த குடிமக்களுக்கு 50 சதவீதச் சலுகை வழங்குவதுபோல் 58 வயதுக்கு மேற்பட்ட திருநங்கைகளுக்கும் 50 சதவீதம் கட்டணச் சலுகை வழங்கப்படும் என்று ரயில்வே அறிவித்துள்ளது.**

**142] இந்திய அளவில் 42 துறைகளைச் சேர்ந்த 372 அரசு சேவைகள் ஆன்லைன் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.**

- ✓ இதில் இமாச்சலபிரதேசம் 73 சேவைகளையும் , டாமன் & டையூ யூனியன் பிரதேசம் 69 சேவைகளையும், ஆந்திரா அரசு 60 சேவைகளையும் வழங்கி முதல் மூன்று இடங்களில் உள்ளன.

- ✓ டெல்லி 55 சேவைகளையும் , தமிழகம் 54 சேவைகளையும் வழங்கி 4 & 5 வது இடத்தில் உள்ளன.

- ✓ புதுச்சேரியில் 13 சேவைகள் வழங்கப்படுகிறது. குஜராத்தில் 12 சேவைகள் வழங்கப்படுகிறது. இவையிரண்டும் 25 & 26வது இடத்தில் உள்ளன. மிசோரம் கடைசியிடத்தில் ( 36வது ) உள்ளது.

- ✓ மிக முக்கிய 10 சேவைகளாக மத்திய அரசு குறிப்பிட்டுள்ளவைகளில் 4 சேவைகளை கோவா மாநிலமும், 3 சேவைகளை ஆந்திரா மாநிலமும் வழங்குகின்றன. குஜராத் & தமிழகம் இந்த 10 சேவைகளில் எவைற்றையும் வழங்கவில்லை.

**143] பூமியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை பாதுகாப்பாக அகற்ற ஆளில்லா குட்டி விமானத்தை குஜராத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர் ஹர்ஷவர்தன் ஜாலா உருவாக்கியுள்ளார்.**

**144] ECI app**

- ✓ வாக்காளர்கள், தேர்தல் அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு தேவையான அனைத்து தகவல்களும் ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் தேர்தல் ஆணையம், ECI என்ற செயலியை அறிமுகம் செய்துள்ளது.
- ✓ அந்த செயலியில் வாக்காளர் பட்டியலில் எப்படி பெயர் சேர்ப்பது, குறிப்பிட்ட தொகுதியில் எங்கு வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது என்பது முதல் பல்வேறு தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

**145] அமெரிக்க அரசியல் வரலாற்றிலேயே முதல் முறையாக 5 இந்திய வம்சாவளி அமெரிக்க எம்பிக்களும் அதிகாரமிக்க நாடாளுமன்ற குழுவில் இடம்பெற்றுள்ளனர்.**

- ✓ லிகான் வேலியில் இருந்து எம்பியாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய வம்சாவளியை சேர்ந்த ரோ கண்ணாவுக்கு அமெரிக்க நாடாளுமன்றத்தின் வலிமைமிக்க பட்ஜெட் குழு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

- ✓ சீயாட்டில் இருந்து பிரதிநிதிகள் சபை எம்பி யாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரமீளா ஜெயபால் நீதித்துறை குழுவின் உறுப்பினராக நியமிக் கப்பட்டுள்ளார்.

- ✓ சிகாகோ மேற்கு மற்றும் வட மேற்கு புறநகர் தொகுதி எம்பியான ராஜா கிருஷ்ணமூர்த்திக்கு கல்வி மற்றும் பணி ஆற்றல் குழுவின் உறுப்பினர் பதவியும், குடியரசு கட்சியின் கொள்கை முடிவு குழு வின் பதவியும் வழங்கப்பட் டுள்ளது.

- ✓ 3 முறை எம்பியாக தேர்வான வரும், இந்திய வம்சாவளி அமெரிக்க எம்பிக்களில் மிகவும் மூத்தவருமான அமி பெரா வெளியுறவு விவகாரங்கள் குழு, அறிவியல், விண்வெளி மற்றும் தொழில்நுட்ப குழு உறுப்பினராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியா மற்றும் இந்திய வம்சாவளி அமெரிக்கர்களின் சார்பில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் தலைமை தாங்கும் பொறுப்பும் பெராவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ✓ அமெரிக்க செனட் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய வம்சாவளி அமெரிக்கரான கமலா ஹாரிஸ், அதிகாரமிக்க செனட் குழுக்களின் உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். பட்ஜெட், உளவுதுறையின் தேர்வு குழு, சுற்றுச்சூழல், பொதுப்பணித்துறை, அரசு விவகாரங்கள் மற்றும் உள் நாட்டு பாதுகாப்பு சார்ந்த குழுவின் உறுப்பினராக அவர் நீடிப்பார்.

**146] நிலவில் காலடி எடுத்து வைத்த இறுதி விண்வெளி வீரர் அமெரிக்காவின் ஜின் செர்னன் [ Eugene Cernan ] வயது முதிர்வின் காரணமாக காலமானார்.**

- ✓ செர்னன் 1972-ம் ஆண்டு, அமெரிக்காவால் நிலவில் விண்வெளி ஆராய்ச்சிக்கு செலுத்தப்பட்ட ‘அப்பலோ 17’ விண்கலத்துக்கு தளபதியாக இருந்தவர். நிலவில் கடைசியாக காலடி வைத்த நபர் ஜின் செர்னன் ஆவார்.

- ✓ நிலவில் முதலில் காலடி எடுத்த வைத்த அமெரிக்காவின் நீல் ஆம்ஸ்ட்ராங் 2012-ம் ஆண்டு மரணமடைந்தார்.

**147] அண்டவெளியில் விண்மீன் கொத்து மோதல் (collision of giant galaxy clusters) நிகழ்ந்துள்ளது. இந்த நிகழ்வு பூமியிலிருந்து 2 மில்லியன் ஒளியாண்டு தூரத்தில் நடந்துள்ளது.**

- ✓ பெருநிறை கருந்துளையால் (supermassive black hole) இந்த விண்மீன் கொத்து மோதல் நிகழ்ந்துள்ளது. இதனால் இயற்கையான பிரபஞ்சத் துகள் முடுக்கி (cosmic particle accelerator) உருவாகியுள்ளதாக வானியலாளர்கள் தெரிவிக்கிறர்கள்.

- ✓ இந்த மாபெரும் நிகழ்வு பூனேயில் உள்ள பிரம்மாண்டமான தொலைநோக்கியாலும் (Giant Metrewave Radio Telescope (GMRT)) நாசாவில் உள்ள சந்திரா எக்ஸ்ரே ஆய்வகம் (Chandra X-ray Observatory) மூலமாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### 148] ஸின்ஜிபர் சூடோ ஸ்கோர்சம் (Zingiber pseudo squarrosum)

- ✓ இந்தியத் தாவரவியல் ஆய்வு நிறுவனம் அந்தமான் தீவில் புதிய இஞ்சி ரகத்தைக் கண்டுபிடித்துள்ளது.
- ✓ ஸின்ஜிபர் சூடோ ஸ்கோர்சம் (Zingiber pseudo squarrosum) எனப் பெயர் கொண்ட இந்தத் தாவரம் இஞ்சிக் குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் தண்டு சிவப்பு நிறத்தில் உள்ளது. இதன் பூ தாமரையின் வடிவத்தைப் போல இருக்கிறது. இது மருத்துவ குணம் வாய்ந்தது.
- ✓ சீனா, ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து இதுவரை 140 இஞ்சி ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலிருந்து 20 ரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 7 அந்தமானில் கண்டுபிடிக்கப்பட்டவை.

### 149] VVPAT - Voter Verifier Paper Audit Trail

- ✓ வாக்காளர்கள் தங்கள் வாக்கைச் சரிபார்த்துக்கொள்ளும் விதமாக வாக்கு எந்திரத்தில் சரிபார்ப்பு ஒப்புகைச் சீட்டு ( Vote Verifier Paper Audit Trail - VVPAT ) வழங்கும் முறை , அடுத்த மாதம் நடைபெறவுள்ள கோவா மாநில தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- ✓ நாட்டிலேயே முதல் முறையாக ஒரு மாநிலம் முழுவதும் இந்த முறை அறிமுகப்படத்தப்படவுள்ளது இதுதான் முதல்முறை.
- ✓ பஞ்சாப்பில் மாவட்டத்துக்கு ஒரு தொகுதி என 13 தொகுதிகளிலும் மணிப்பூர் மாநிலத்தில் நான்கு தொகுதிகளிலும் உத்தரப் பிரதேசத்தில் 20 தொகுதிகளிலும் உத்தராகண்ட்டில் நான்கு தொகுதிகளிலும் சரிபார்ப்பு ஒப்புகைச் சீட்டு ( VVPAT ) முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- ✓ [ 2013-ம் ஆண்டு நாகாலாந்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நோக்சென் தொகுதியில் முதன்முதலில் இந்த முறை சோதித்துப் பார்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 2014-ம் ஆண்டின் நாடாளுமன்றத் தேர்தலில் 8 தொகுதிகளில் இந்த முறை சோதித்துப் பார்க்கப்பட்டது. ]

### 150] 20th National Conference for e-Governance 2016-17

- ✓ 20வது தேசிய மின்னணு ஆட்சி மாநாடு 2016-17 விசாகப்பட்டினத்தில் நடைபெற்று முடிந்துள்ளது. **கருப்பொருள். --- Internet of Things and e-Governance**

**151] பிரிட்டனில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான , பிரிட்டிஷ் ஜூனியர் ஓபன் ஸ்குவாஸ் போட்டியில், முதல் மூன்று இடங்களையும் இந்தியர்களே வென்று வரலாற்று சாதனை புரிந்துள்ளனர்.**

- ✓ 01 --- வேலவன் செந்தில்குமார்
- ✓ 02 --- அபய்சிங்
- ✓ 03 --- ஆதித்யா ராகவன்

**152] Bose : An Indian Samurai : Netaji and the INA : a Military Assessment**

- ✓ எழுதியவர் ---- Major General (Retd) GD Bakshi

**153] The Untold Vajpayee : Politician and Paradox**

- ✓ எழுதியவர் ---- Ullekh NP

**154] உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்ற, தமிழறிஞர் ச.வே. சுப்பிரமணியன் , வயது முதிர்வின் காரணமாக ஜனவரி 12ல் காலமானார்.**

- ✓ ஆங்கிலம், மலையாளம் உட்பட மொத்தம் 200 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியவர். கவிக்கோ அப்துல் ரகுமான், க.ப. அறவாணன் உள்ளிட்ட 44 அறிஞர் பெருமக்கள் முனைவர் பட்டம் பெற வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.

- ✓ தென்காசி ஆலங்குளம் சாலையில், 'தமிழூர்' என்ற ஊரை உருவாக்கி, காலமெல்லாம் தமிழுக்கு அரும்பணி ஆற்றிக்கொண்டு இருந்தவர். 'உலகத் தமிழ்க் கல்வி இயக்ககம்' என்ற அமைப்பை, இறுதி வரை நடத்திக் கொண்டு இருந்தவர்.

**155] 47th World Economic Forum Meeting**

- ✓ உலக பொருளாதார மையத்தின் 47வது ஆண்டு கூட்டம் , தாவோஸ் நகரில் ( சுவிட்சர்லாந்து) ஜனவரி 16 -20 வரை நடைபெறுகிறது.

**156] தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய " பினாகின் " செயலியை சுற்றுலாத் துறை அறிமுகம் செய்துள்ளது.**

**157] 2008 பெய்ஜிங் ஒலிம்பிக்கில் பளுதூக்குதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற சீன வீராங்கனைகள் கோவ் லீ (75 கிலோ), சென் ஸியெக்ஸியா (48 கிலோ), லியூ சுன்காங் (69) ஆகியோர் ஊக்கமருந்து பயன்படுத்தியது அம்பலமாகியுள்ளது. இதனால் அவர்களுடைய பதக்கம் பறிக்கப்பட்டுள்ளது.**

- ✓ ஒரு நாட்டைச் சேர்ந்த 3 அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்கள் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரியவந்தால் அந்த நாட்டுக்கு ஓர் ஆண்டு தடை விதிப்பது என உலக பளுதூக்குதல் சம்மேளனம் தீர்மானம் கொண்டு வந்துள்ளது. அதன்படி இப்போது சீனா ஓர் ஆண்டு தடையை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதனால் வரும் ஏப்ரலில் நடைபெறவுள்ள ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியிலும், நவம்பரில் நடைபெறவுள்ள உலக சாம்பியன்ஷிப் போட்டியிலும் சீனா பங்கேற்க முடியாது.

**158] புதுடெல்லியில் நடைபெற்ற 2வது பிரிமியர் பேட்மிண்டன் லீக் போட்டித்தொடரின் இறுதி போட்டியில் பி.வி.சிந்து தலைமையிலான சென்னை ஸ்மாஷர்ஸ் அணி மும்பை அணியை வீழ்த்தி பிரிமியர் பேட்மிண்டன் லீக் சாம்பியன் பட்டம் வென்றது.**

- ✓ இந்த போட்டி தொடரில் சென்னை ஸ்மாஷர்ஸ், ஐதராபாத் ஹன்டர்ஸ், பெங்களூரு பிளாஸ்டர்ஸ், டெல்லி ஏசர்ஸ், லக்னோ அவாத் வாரியர்ஸ், மும்பை ராக்கெட்ஸ் ஆகிய 6 அணிகள் பங்கேற்றன.

**159] கோவை மாநகராட்சியை திறந்தவெளி கழிப்பிடமில்லாத நகரமாக தூய்மை பாரத இயக்கம் மற்றும் மத்திய நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இந்திய தர கவுன்சில் அறிவித்துள்ளது.**

**160] Dasht & Zhob**

- ✓ குவாடர் துறைமுகத்தையும், சீனா- பாகிஸ்தான் பொருளாதார பாதையோடு தொடர்புடைய கடல்வழி பாதைகளையும் பாதுகாப்பதற்கு பாகிஸ்தான் கடற்படைக்கு Dasht & Zhob என்ற இரண்டு கப்பல்களை சீனா வழங்கியுள்ளது.

**161] ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சிட்னி சர்வதேச டென்னிஸ் போட்டித் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், இங்கிலாந்து வீராங்கனை ஜோகன்னா கோன்டா , போலந்து வீராங்கனை அக்னீஸ்கா ரத்வன்ஸ்காவை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றார்.**

- ✓ மகளிர் இரட்டையர் பிரிவு பைனலில் ஹங்கேரியின் டிமியா பாபோஸ் - அனஸ்டேசியா பாவ்லியுசென்கோவா (ரஷ்யா) ஜோடி, இந்தியாவின் சானியா மிர்சா - பார்போரா ஸ்டிரைகோவா (செக் குடியரசு) ஜோடியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளனர்.

**162] ரஞ்சி கோப்பை தொடரில் முதல் முறையாக குஜராத் அணி , 46 முறை இறுதி போட்டிக்குள் நுழைந்த மும்பை அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது.**

**163] பிஹாரில் அமல்படுத்தப்பட்டுள்ள மதுவிலக்கை ஆதரித்து, 11, 292 கி.மீ. தூரத்திற்கு உலகின் மிக நீளமான மனித சங்கிலி தலைநகர் பாட்னாவில் அமைக்கப்பட உள்ளது.**

**164] அமெரிக்க துணை அதிபர் ஜோ பிடேனுக்கு அந்த நாட்டின் மிக உயரிய விருதான 'மெடல் ஆப் பிரீடம்' (சுதந்திர விருது) விருதினை அதிபர் ஒபாமா வழங்கியுள்ளார்.**

**165] டாடா சன்ஸ் நிறுவனங்களின் குழுமத் தலைவராக , டிசிஎஸ் நிர்வாக இயக்குநரும் தலைமைச் செயலதிகாரியுமான என்.சந்திரசேகரன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர், தமிழ்நாட்டின் நாமக்கல் அருகேயுள்ள மோகனூரில் பிறந்தவர்.**

- ✓ கடந்த 2012 முதல் டாடா சன்ஸ் தலைவராக பதவி வகித்து வந்த சைரஸ் மிஸ்ட்ரி அக்டோபர் 24 / 2016ல் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின் ரத்தன் டாடா இடைக்கால தலைவராக செயல்பட்டுவந்தார்.

- ✓ புதிய தலைவரை தேர்வு செய்த குழு --- ரத்தன் டாடா , வேணு சீனிவாசன் , அமித் சந்திரா , ரோனன் சென் & சுஷாந்த் குமார் பட்டாச்சார்யா

- ✓ [ தற்போது TCS நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக ராஜேஸ் கோபிநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார் ]

**166] உலகின் தலைசிறந்த மியூசியங்களில் ஒன்றான மேடம் துஸாட்ஸ் மெழுகு மியூசியத்தின் கிளை, தலைநகர் டெல்லியில் வருகின்ற ஜூன் மாதம் திறக்கப்படுகிறது.**

- ✓ இது மேடம் துஸாட்ஸ் மியூசியத்தின் 23-வது கிளையாகும்.

**167] சர்வதேச கால்பந்து தரவரிசையில் இந்திய கால்பந்து அணி 129-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இந்திய அணியின் அதிகபட்ச தரவரிசை இதுதான்.**

- ✓ இந்திய அணி இதற்கு முன்னர் 2005-ஆம் ஆண்டில் 127-ஆவது இடத்தைப் பிடித்தது.

**168] ஒடிஸா மாநிலம், பாலாசோர் மாவட்டத்தில் சண்டிப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து அதிநவீன மேம்படுத்தப்பட்ட " பினாகா' மார்க் - 2 " ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது.**

- ✓ மகாராஷ்டிர மாநிலம், புணேவில் உள்ள போர்க்கருவிகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (ஏஆர்டிஈ), தெலங்கானா மாநிலம், ஹைதராபாத்தில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு ஆய்வகம் (டிஆர்டிஎல்) ஆகியவை இணைந்து " பினாகா மார்க் - 2 " ஏவுகணையை உருவாக்கின.

**169] இரண்டாவது நீர்மூழ்கிக் கப்பல் " காந்தேரி " ( Khanderi )**

- ✓ இந்தியா கூட்டு தொழில் நுட்பத்தில் 6 நீர்மூழ்கிக் கப்பல் தயாரிக்க 2005-ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் மும்பையில் உள்ள எம்.டி.எல். கப்பல் கட்டும் தளத்தில் தயாரிக்கப்படுகிறது.

- ✓ இதில் முதல் நீர்மூழ்கிக் கப்பல் "கல்வாரி" கடந்தாண்டு தயாரிக்கப்பட்டு, தற்போது கடற்படையின் கட்டுப்பாட்டில் பயிற்சி மற்றும் சோதனையில் உள்ளது.

- ✓ இந்நிலையில் இரண்டாவது நீர்முழ்கியின் கட்டுமானம் முடிக்கப்பட்டு பயிற்சி மற்றும் சோதனைக்காக கடற்படை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கு "காந்தேரி" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

**170] தமிழக அரசு விருதுகள்**

★ திருவள்ளுவர் விருது 2017 -- புலவர் பா. வீரமணி

★ தந்தை பெரியார் விருது 2016 -- பண்ருட்டி. ராமச்சந்திரன்

★அம்பேத்கர் விருது 2016 -- மருத்துவர். ரா.துரைசாமி

★ பேரறிஞர் அண்ணா விருது 2016 -- கவிஞர் கூரம் மு.துரை

★ பெருந்தலைவர் காமராசர் விருது 2016 -- டி.நீலகண்டன்

★ மகாகவி பாரதியார் விருது 2016 -- முனைவர் கணபதி ராமன்

★ பாராதிதாசன் விருது கவிஞர் 2016 -- கோ. பாரதி

★ தமிழ் தென்றல் திரு.வி.க விருது 2016 -- பேராசிரியர் மறைமலை இலக்குவனார்

★ முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது 2016 -- மீனாட்சி முருகரத்தினம்

- ✓ மேற்கண்டோருக்கு தமிழக அரசின் சார்பில் ரூ.1 லட்சத்துக்கான காசோலை, 1 சவரன் தங்கப் பதக்கம் மற்றும் தகுதி சான்றிதழ் விருது ஆகியன வழங்கப்படும்.

**171] தற்போது பிரான்ஸ் நாட்டில் உடல் உறுப்பு தானம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

- ✓ ஏற்கெனவே ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின், மற்றும் ஆஸ்திரியாவில் உடல் உறுப்பு தானம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**172] ஆரோக்கியமாக வாழும் வியட்நாம் மக்கள் அனைவரும் ஆண்டுக்கு ஒருமுறை ரத்த தானம் செய்வதை கட்டாயமாக்கும் வகையில் அந்நாட்டின் சுகாதார துறை வரைவு மசோதா தாக்கல் செய்துள்ளது.**

**173] SWARM**

- ✓ எதிரிகளை திணறடிக்க கூட்டம் கூட்டமாக சென்று தாக்க கூடிய சிறிய ரக ஆளில்லா போர் விமானங்களை அமெரிக்கா உருவாக்கியுள்ளது. இதற்கு " ஸ்வார்ம் " என பெயரிட்டுள்ளனர்.

**174] இந்தியாவின் முதல் பார்வையற்றோர் நூலகம், 200 புத்தகங்களுடன் ஹவுகாத்தியில் [ Blind High School ] துவங்கப்பட்டுள்ளது.**

**175] பிப்ரவரி 2017ல் நடைபெறவுள்ள மணிப்பூர் மற்றும் உத்ரகாண்ட் மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் , முதன்முறையாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயருடன் புகைப்படமும் இடம் பெற உள்ளது.**

**176] Upastithi app**

- ✓ அடுத்த கல்வியாண்டு முதல் , மகாராஷ்டிரா மாநில பள்ளி மாணவர்களின் தினசரி வருகை onlineல் பதிவு செய்வதற்காக Upastithi app அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கல்வித்துறை அதிகாரிகள் பள்ளிகளின் மாணவர் வருகை விபரங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள வழிஏற்படும்.

**177] காற்று மாசுபாடு காரணமாக இந்தியாவில் ஆண்டுக்கு 12 லட்சம் பேர் உயிரிழப்பதாகவும், நாட்டிலேயே காற்று மாசு அதிகமாக உள்ள நகரம் தில்லி என்றும் கிரீன்பீஸ் இந்தியா என்ற தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

- ✓ இந்தியாவில் காற்று மாசுபாடு அதிகமாக உள்ள முதல் 20 நகரங்களில், கடந்த 2015-ஆம் ஆண்டில் பிஎம்10 என்ற காற்று மாசு குறீயீட்டின் அளவானது 268/168 என்ற அளவில் இருந்துள்ளது.

- ✓ இந்தப் பட்டியலில் 268 என்ற குறீயிட்டு அளவுடன் தில்லி முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து 258 முதல் 200 என்ற குறீயிட்டு அளவுடன் காஜியாபாத், அலாகாபாத், பரேலி (உத்தரப் பிரதேசம்), ஃபரீதாபாத் (ஹரியாணா), ஜாரியா (ஜார்க்கண்ட்), அல்வார் (ராஜஸ்தான்), ராஞ்சி, குசுன்டா, பாஸ்டகோலா (ஜார்க்கண்ட்), கான்பூர் (உத்தரப் பிரதேசம்), பாட்னா (பிகார்) ஆகிய நகரங்கள் உள்ளன.
  இதில் 268 என்ற காற்று மாசு குறியீடானது, மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் ஆண்டுதோறும் நிர்ணயிக்கப்படும் தேசிய சுற்றுப்புற காற்றுத் தர மதிப்பீட்டு அளவை விட 4.5 மடங்கு அதிகமாகும். அதேவேளையில், உலக சுகாதார அமைப்பால் (டபிள்யுஹெச்ஓ) வரையறுக்கப்பட்ட அளவை விட 13 மடங்கு அதிகமாகும்.

- ✓ இதில் தில்லியில் கடந்த 2015 அக்டோபர் முதல் 2016 பிப்ரவரி வரையிலான மாதங்களில் காற்று மாசுபாட்டு குறியீடானது 500 என்ற அபாய அளவை எட்டியதும் குறிப்பிடத்தக்கது.

**178] இந்திய ஹாக்கி அணியின் கேப்டன் ஸ்ரீஜேஷ், சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் [ International Hockey Federation (FIH) ] வீரர்கள் கமிட்டியில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.**

- ✓ எப்.ஐ.எச். வீரர்கள் கமிட்டியில் முன்னாள் வீரர்கள், இந்நாள் வீரர்கள் என மொத்தம் 8 பேர் உள்ளனர்.
- ✓ இந்தக் கமிட்டி எப்.ஐ.எச். மற்றும் ஹாக்கி வீரர்கள் இடையிலான தகவல் தொடர்பு அமைப்பாக செயல்படுகிறது. எப்.ஐ.எச்.சின் முடிவுகளில் வீரர்களுக்கு ஏதாவது ஆட்சேபம் இருந்தால், அதற்கு இந்த வீரர்கள் கமிட்டி மூலம் எதிர்ப்பை பதிவு செய்ய முடியும்.

**179] மனிதர்களை போன்ற தோற்றமும், முகபாவனைகளும் காட்டும் ரோபோவை சீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலையின் சின் ஷியாபிங் தலைமையிலான இன்ஜினியர்கள் குழு தயாரித்து, செயல்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளது.**

- ✓ இந்த ரோபோவுக்கு 'ஜியா ஜியா' என, பெயரிடப்பட்டுள்ளது.

**180] 2017-ம் ஆண்டில் உலக அளவில் பொருளாதார வளர்ச்சி 2.7 சதவீதமாக இருக்கும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.**

- ✓ உயர்மதிப்பு கொண்ட ரூபாய் நோட்டு வாபஸ் திட்டத்தை செயல்படுத்தியதால் 2016-ம் ஆண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி வேகம் குறைந்துள்ளதாக உலக வங்கி கணித்துள்ளது. இதனால் 2016-17-ம் நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 7.6 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறையும் எனவும், தெரிவித்து உள்ளது.
- ✓ உலக வங்கி தலைவர் --- ஜிங் யாங் கிம்

**181] டில்லி நகரின் மக்கள் தொகை உலகில் உள்ள 10 நாடுகளின் மக்கள் தொகையை தாண்டி விட்டது என ஐக்கிய நாடுகள் சர்வே தெரிவித்துள்ளது.**

- ✓ புதுடில்லியின் மக்கள் தொகை 2014-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 2.5 (25 மில்லியன்) கோடி ஆக இருந்தது.

**182] தமிழகத்தில் உள்ள இஸ்லாமிய காஜிக்கள், பிப்ரவரி 21வரை தலாக் சான்றிதழ் வழங்க சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.**

**183] வங்கதேசத்தில், டாக்டர்கள் மருந்து சீட்டுகளில் தங்கள் கைகளால் எழுதக்கூடாது. மருந்து விவரங்களை டைப் அடித்து கொடுக்க வேண்டும் என்று அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

**184] Pradhan Mantri Ke Mann Ki Baat**

- ✓ பிரதமர் மோடி வானொலியில் Maan Ki Baat என்ற தலைப்பில் ஆற்றிய உரைகளை தொகுத்து , ராஜிவ் குப்தா என்பவர் Pradhan Mantri Ke Mann Ki Baat என்ற பெயரில் புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

**185] திகார் சிறையில் உள்ள ஆண் கைதிகளின் சிறை பாதுகாப்புக்கு முதல் முறையாக அஞ்சு மங்கலா என்ற பெண் கண்காணிப்பாளர் பணியமர்த்தப்பட்டுள்ளார்.**

**186] நேபாள நாட்டின் லால்பகேயா, பாக்மதி, கமலா ஆகிய மூன்று நதிகளில் வெள்ளத் தடுப்பு கரைகள் அமைக்க இந்தியா 38.82 கோடி நிதியுதவி அளித்துள்ளது.**

**187] நிகரகுவா நாட்டின் அதிபராக டேனியல் ஒர்டோகன் மற்றும் துணை அதிபராக அவரின் மனைவி ரோஸாரியோ முரில்லோ பதவியேற்றுள்ளனர்.**

- ✓ நாட்டின் உயரிய இரு பதவிகளில் கணவன் மனைவி உள்ளனர்.

**188] இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழைமை வாய்ந்த நகரம் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

- ✓ சீன தொல்லியல் ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள், லியோனிங் மாகாணத் தலைநகர் ஷென்யாங்கில் அகழ்வாய்வில் ஈடுபட்டனர். பழைய நகரம் என்று அறியப்படும் பகுதியில் கடந்த ஆண்டு ஜூலை முதல் அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகிறது.

- ✓ பழைமையான கிங்ஸிவாங்ஸி ( Qingzhuangzi City ) நகரத்தின் சிதிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வீடுகள், சேமிப்பு கிடங்குகள், கல்லறைகள் ஆகியவை அதில் அடங்கும்.

**189] Babur-3**

- ✓ நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தக் கூடிய அணுஆயுத வல்லமை கொண்ட " பாபர் - 3 " ஏவுகணையை, பாகிஸ்தான் வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

- ✓ அணு வெடிபொருளை சுமந்து சென்று, சுமார் 450 கிமீ பாய்ந்து இலக்கை தாக்கும் வல்லமை கொண்டது இந்த ஏவுகணை.

**190] தென் கொரியாவில், பூஸன் நகரில் உள்ள ஜப்பான் துணைத் தூதரகம் முன்பு அமைக்கப்பட்டுள்ள "பாலியல் அடிமைப் பெண்' சிலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்த நாட்டுக்கான ஜப்பான் தூதர் யாசுமாஸா நாகமினே திரும்ப அழைக்கப்பட்டார்.**

**191] Presidential Early Career Awards for Scientists and Engineers (PECASE)**

- ✓ அமெரிக்காவில் இளம் விஞ்ஞானிகளை ஊக்கப்படுத்தும் வகையில் "ஆரம்ப நிலை விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களுக்கான அதிபர் விருது' கடந்த 1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

- ✓ நடப்பாண்டுக்கான இந்த விருதுக்கு 102 விஞ்ஞானிகளை அதிபர் ஒபாமா தேர்வு செய்துள்ளார். இவர்களில் 4 இந்திய வம்சாவழியினர் இடம்பெற்றுள்ளனர்.

- ✓ மான்ட்க்ளேர் மாகாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பங்கஜ் லால், வடகிழக்குப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கௌசிக் சவுத்ரி, இகான் மருத்துவக் கல்லூரியில் பணியாற்றும் மணீஷ் அரோரா, கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராதனா திரிபாதி

**192] 3 - D**

- ✓ முதலீட்டாளர்களை ஈர்க்கும் விதமாக , குஜராத் மாநில அரசின் " குஜராத் வைப்ரன்ட் - 2017 " ( Gujarat Vibrant - 2017 ) மாநாடு , காந்தி நகரில் ஜனவரி 10 - 13 வரை நடைபெறுகிறது.

- ✓ இந்த மாநாட்டை துவக்கி வைத்த பிரதமர் மோடி மூன்று Dக்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

  01) Demography [ மக்கள் தொகை பெருக்கம் ]

02) Democracy [ ஜனநாயகம் ]

03) Demand [ தேவை ]

- ✓ ஆகியன இந்தியாவின் வலுவான அம்சம் என்றும், உலகிலேயே உற்பத்தி துறையில் 6வது பெரிய நாடாக இந்தியா உள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

**193] IRCTC Rail Connect app**

- ✓ ரயில் டிக்கெட்டுகளை எளிதாகவும் வேகமாகவும் முன்பதிவு செய்ய 'ஐஆர்சிடிசி ரயில் கனெக்ட்' என்ற பெயரில் புதிய செயலி ஒன்றை இந்திய ரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் (ஐஆர்சிடிசி) அறிமுகம் செய்துள்ளது. [ சில மாதங்களுக்கு முன் Irctc Connect என்ற செயலி வெளியிடப்பட்டு இருந்தது ]

**194] உலக கோப்பை கால்பந்து போட்டியில் பங்கேற்கும் நாடுகளின் தற்போதைய எண்ணிக்கையான 32 என்பதனை 48-ஆக மாற்றும் திட்டத்துக்கு ஃபிஃபா என்றழைக்கப்படும் சர்வதேச கால்பந்து அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது.**

- ✓ வரும் 2026 ஃபிஃபா உலக கோப்பை கால்பந்து போட்டியில் அதிக 16 குழுக்கள் செயல்படும். ஒவ்வொரு குழுவிலும் மூன்று அணிகள் இடம்பெறும்.

- ✓ இக்குழுக்களில் நடக்கும் போட்டிகளில் முதல் இரண்டு இடம் பெறும் அணிகள் நாக்அவுட் ( வெளியேற்றத்தை முடிவு செய்யும் சுற்று) சுற்றுக்கு தகுதி பெறும். நாக்அவுட் சுற்றில் 32 நாடுகள் விளையாடும்.

**195] அமெரிக்காவிவின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்டு ட்ர்மப் தனது மருமகன் ஜார்ட் குஷ்னரை வெள்ளை மாளிகையின் முக்கிய ஆலோசகராக நியமித்துள்ளார்.**

- ✓ ரியல் எஸ்டேட் நிர்வாகியான ஜார்ட் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளில் வர்த்தகம் தொடர்பாக அம்சங்களை கவனிப்பார் என்று கூறப்படுகிறது.

**196] 2016-17 நிதியாண்டிற்கான தேசிய வருமானம் கணிப்பு' அறிக்கையை மத்திய புள்ளியியல் அலுவலகம் (சிஎஸ்ஓ) வெளியிட் டுள்ளது.**

- ✓ இதன்படி 2016-17 நிதியாண்டில் தனிநபர் வருமானம் ரூ.1,03,007 ஆக இருக்கும் என்று கணித்துள்ளது. கடந்த வருட தனிநபர் வருமானத்தை விட இது 10.4 % அதிகமாகும்.

- ✓ கடந்த நிதியாண்டில் தனிநபர் வருமானம் 93,293 ரூபாயாக கணித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

- ✓ நிலையான விலை நிலவரப்படி தனிநபர் வருமான வளர்ச்சி விகிதம் இந்த நிதியாண்டில் 5.6 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு 6.2 சதவீதமாக இருந்தது

**197] பிளைட்ஸ்டாட்ஸ் நிறுவனம் வருடந்தோறும் சர்வதேச அளவில் சிறந்த செயல்பாடுகளை அளித்து வரும் விமான நிறுவனங்கள் பட்டியலையும், மிக மோசமான செயல்பாடுகளை வழங்கிவரும் நிறுவனங்கள் பட்டியலையும் வெளியிடுகிறது.**

- ✓ நிகழ்கால சேவைகளை சிறப்பாக வழங்கி வரும் விமான நிறுவனங்களில் , கேஎல்எம் நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. இபேரியா நிறுவனம் இரண்டாமிடத்திலும் ஜேஏஎல் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

- ✓ நிகழ்கால சேவைகளை மோசமாக வழங்கி வரும் நிறுவனங்கள் பட்டியலில் இஎல் ஏஎல் முதலிடத்திலும் ஐஸ்லேண்ட் ஏர் இரண்டாவது இடத்திலும் உள்ளன. இந்தியாவின் ஏர் இந்தியா நிறுவனம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

**198] கர்நாடகா வங்கி , Universal Sompo General Insurance நிறுவனத்துடன் இணைந்து, தங்கள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்துள்ளவர்களுக்கு KBL Suraksha என்ற குழு விபத்து காப்பீட்டு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.**

**199] பருவமழை பொய்த்தது மற்றும் ரூபாய் நோட்டு மதிப்பிழப்பு விவகாரம் ஆகியவை காரணமாக முந்தைய 2015-16-ஆம் நிதியாண்டில் 7.6% இருந்த பொருளாதார வளர்ச்சி தற்போது 7.1%ஆக குறையும் என்று தலைமை புள்ளியியல் அலுவலக ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.**

- ✓ மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) வளர்ச்சி, நடப்பு நிதியாண்டில் 7% இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த நிதியாண்டில் 7.2%ஆக இருந்தது.

- ✓ அதேசமயத்தில், வேளாண் துறை, மீன் பிடிப்புத் துறை, வனத்துறை ஆகியவற்றின் வளர்ச்சி 1.2%ல் இருந்து 4.1% அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாகவும் சுரங்கத் துறையின் வளர்ச்சி 1.8% குறையும் எனவும், உற்பத்தித் துறையின் வளர்ச்சி 9.3% இருந்து 7.4 % குறையும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

### 200] India Today Conclave South - 2017

- ✓ இந்தியா டுடே ஊடக நிறுவனத்தின் இரண்டு நாள் மாநாடு , சென்னையில் ஜனவரி 09 மற்றும் 10ல் நடைபெற்றுள்ளது.

### 201] எழுத்தாளர் மாலனுக்கு "ஆய்வுக் கொடையை " ( Fellowship ) சிங்கப்பூர் தேசிய நூலகம் வழங்கியுள்ளது.

- ✓ "லீ காங் சியான் ஆய்வறிஞர்' என்ற சிறப்புக் கௌரவத்தை அவருக்கு இந்த ஆண்டு சிங்கப்பூர் தேசிய நூலகம் வழங்கியுள்ளது.

- ✓ சிங்கப்பூரில் 6 மாதம் தங்கியிருந்து சிங்கப்பூர் தமிழ் இலக்கியம் குறித்த ஆய்வு ஒன்றினை அவர் மேற்கொள்வதற்கு இந்தக் கௌரவம் வாய்ப்பளிக்கும். மேலும், சிங்கப்பூரின் சமூக வளர்ச்சி, சிங்கப்பூர் தமிழ் எழுத்துக்களில் எப்படி எதிரொலிக்கிறது என்ற ஆய்வினையும் அவர் மேற்கொள்ள உள்ளார்.

- ✓ 2 லட்சம் நூல்களுடன்...: 16 மாடி கட்டடத்தில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட நூல்கள், 700-க்கும் மேற்பட்ட இதழ்கள், குறுந்தகடுகள், ஒலிப் புத்தகங்களுடன் உலகின் சிறந்த நூலகங்களில் ஒன்றாக சிங்கப்பூர் தேசிய நூலகம் விளங்குகிறது. இந்த நூலகத்தை 1960-ஆம் ஆண்டு கொடையாளரும் சீன வணிகருமான "லீ காங் சியான்' நிறுவினார். அவரது பெயரில் "லீ காங் சியான் ஆய்வறிஞர்' என்ற சிறப்பு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

### 202] India International Xchange ( INDIA INX )

- ✓ நாட்டின் முதலாவது சர்வதேச பங்குச் சந்தை குஜராத் மாநிலம், காந்திநகரின் கி்ஃப்ட் சிட்டி (குஜராத் இண்டர்நேஷனல் ஃபைனான்ஸ் டெக் -சிட்டி GIFT city ) பகுதியில் "இந்தியா - ஐஎன்எக்ஸ்' என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ளது. இதனை பிரதமர் மோடி துவக்கி வைத்துள்ளார்.

### 203] கோவையைச் சேர்ந்த பொறியாளர் கிரண் பட் , அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் ஆஸ்கர் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- ✓ கிரண் பட் ஹாலிவுட்டில் வெற்றி பெற்ற அவென்ஜர்ஸ், பைரேட்ஸ் ஆஃப் கரீபியன், வார்கிராப்ட், ஸ்டார் வார்ஸ் எபிசோட் 7, ஸ்டார் வார்ஸ் ரோக் ஒன் உள்ளிட்ட திரைப்படங்களில் டிஜிட்டல் தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றியுள்ளார். இதில் சிறப்பாகப் பணிபுரிந்ததற்காக, அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பிரிவில் ஆஸ்கர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

- ✓ அறிவியல், தொழில்நுட்பப் பிரிவில் ஆஸ்கர் விருது பெற்றுள்ள கிரண் பட், கோவையில் இருந்து இந்த விருதுக்குத் தேர்வாகியுள்ள இரண்டாவது நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

- ✓ தூத்துக்குடி மாவட்டத்தில் பிறந்து, கோவையில் பள்ளி, கல்லூரி படிப்பை முடித்த கொட்டலாங்கோ லியோன் , கடந்த ஆண்டுக்கான விருதுக்குத் தேர்வான முதலாவது நபராவார்.

**204] ஜம்மு காஷ்மீர் மாநலிம் ரஜோரியைச் சேர்ந்த 8 வயது சிறுவனான அப்பு அமாஸ் , தேசிய அளவில் நடத்தப்பட்ட தாய் பாக்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளான். இதன்மூலம், இளம் வயதில் தேசிய பாக்சிங் சாம்பியன் ஆகியிருக்கிறான்.**